

**HELLO MOBILE WORLD**

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



அறைவு 03 இயம் 16 November 15 - 21, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 16 விலை : 30.00




**STUDIO ABISHA**

Professional Video & Photo Graphers

SA

NO.259 Central Roat, Trincomalee.
0262226842/0772302658/0776617791
abishadigital@gmail.com




# ஆழமாகச் சிந்திப்போம்



## அரசியல் தீர்வு வேண்டுமெனில் ஆதரவு தாருங்கள்

என்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கோரிக்கை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான திரு.சம்பந்தன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரான திரு.பசில் ராசபக்சவினால் விடுக்கப்பட்ட 13

## கடற்பல்கலைக்கழகக் கல்விக்குச் சீன உதவி



திருகோணமலையில் பயிற்சிக் கிளை-யொன்றைக் கொண்டு இயங்கும் கடற்கல்விப் பல்கலைக்கழகத்தின் கல்வி சார் நடவடிக்கைகளுக்குச் சீனாவின் உதவி கிடைக்கப் பெற்றுள்ளதாக அப்பல்கலைக் கழகத்தின் தவிசாளர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு 13

## நச்சுத்தன்மையைப் பரப்பும் நுளம்புச் சுருள்



நுளம்புச் சுருளில் இருந்து வெளிவரும் புகை மனிதனுக்கு நஞ்சாகும் என இலங்கையின் தேசிய வைத்தியசாலையின் நஞ்சூட்டல், நச்சுத் தகவல்கள் அலகு வெளியிட்டுள்ள அறிக்கையொன்று 13



## பாதீட்டில் பல மாற்றங்கள்

ஒக்டோபர் 24ம் திகதி சனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட பாதீட்டின் வாசிப்பும் பாராளுமன்ற விவாதங்களும் நடை பெற்றுவரும் வேளையிலேயே அப்பாதீட்டில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாதீட்டின் 77 செலவீன முன்மொழிவுகளில் 27 முன்மொழிவுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களின் ஊடாக மொத்தச் செலவானது 2.168 ரில்லியன் ரூபாய்களுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. 13

## பொதுக்குரலை உருவாக்க இந்தியா முயற்சியா?



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை அழைத்து இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா நடத்திய பேச்சுவார்த்தையானது இந்தி-யாவில் வைத்து த.தே.கூ விடம் பிரதமர் மோடியினால் 13

## அழிவை எதிர்கொள்ள முன்னேற்பாடு
### "இடைத்தங்கல் முகாம்கள் பற்றிப் பேசப்படவில்லை"

மூதூர் பிரதேசத்தில் எதிர்பாராமல் ஏற்படக்கூடிய அழிவினை எதிர்கொள்ளும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக செயலணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.


கிராமமட்டத்தில் இயங்கும் மக்கள் அமைப்புக்களையும் அரச நிறுவனங்களையும் இணைத்து பிரதேசச் செயலாளரின் தலைமையில் இச் செயலணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் முப்படையினரும் தத்தமது வழிகளில் இவ்வெதிர்-பாரா அழிவின் போது [illegible] செயற்பட 13





**Sugirtha Stationers**



காகிதாதிகள் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்

அரச அங்கீகாரம் பெற்ற வினியோகத்தர்கள்

378/380 Court Road, Trincomalee
026 2225699 - 0775151336


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 026 2227677


## பன்முக நிதியும் மக்கள் சேவையும்

மக்கள் சேவையென்பது எது? என்பதைப் புரிந்துகொள்ளுதல் தமிழ் மக்களுக்கு முன்னுள்ள மிகத் தலையாய கடமையாக உள்ளது...

மக்கள் சேவை என்பது, ஏழை மக்களுக்கும், இல்லாத-இயலாத மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், நோய்க்கு மருந்து, கல்விச்செல்வம் ஆகியனவற்றை அளிப்பதும் ஆகும் என விக்கிப்பீடியா தகவல்தளத்தில் எழுதப் பட்டுள்ளது.

அதனை அப்படியே எமது சூழலில் ஏற்றுக் கொள்ள முடியாது. விசேடமாக ஆயுதப் போராடித் தோல்வி கண்டுள்ள இனமொன்று தனது மனித நேயச் சேவைகளைப் பரந்து பட்ட முறையில் முன்னெடுக்க வேண்டும் என்பதைப் பல வரலாறுகள் சொல்லியிருக்கின்றன.

தமிழ்த் தேசத்தின் உண்மை நிலையும் அப்படித்தான் இருக்கின்றது. தமிழ்த் தலைமைகள் மக்கள் சேவைகளை முன்னெடுக்க வேண்டியவர்களாக அல்லது மக்கள் சேவையை முன்னெடுப்பவர்களை பாதுகாக்க வேண்டியவர்களாக இருப்பதைக் இந்தத் தேசம் எமக்கு உணர்த்தியுள்ளது.

அரசியல் தலைமைகள் தாம் பெற்றுக்கொள்ளும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக வழங்குகின்றவற்றை நாம் மக்கள் சேவைக்குள் உள்ளடக்க முடியுமா? என்ற கேள்வி எம்முன்னே எழுகின்றது.

ஏனெனில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாகக் கொள்வனவு செய்து தாம் கொடுக்கின்றவற்றைப் படம் பிடித்து மக்கள் சேவைகள் புரிவதாக வெளிப்படுத்த முயலும் போக்கு தமிழ்த் தலைமைகளிடம் பெருகி வருவதைக் காணும்போதே இந்தக் கேள்வி எழுந்துள்ளது.

மக்கள் உங்களைத் தெரிவுசெய்வதற்குப் பிரதியுபகாரமாகக் கிடைக்கும் பலவற்றில் ஒன்றான பன்முகப்படுத்தப்பட்ட நிதியானது மக்களைச் சென்றடைய வேண்டும் என்பது விதி... அதனைச் செய்யும் கருவிகள் தான் அரசியல் தலைவர்கள். அது அவர்களின் கடமை. அதனை மறந்து பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வழங்குகின்றவற்றை மக்கள் சேவையெனக் காட்ட முற்படுவது மூன்றாம் தர அரசியல் சிந்தனை என்பது தான் உண்மை....

உதாரணமாக ஒரு பாடசாலைக்கு நியமிக்கப்படும் அதிபர் அப்பாடசாலையில் பரீட்சைப் பெறுபேறுகளை உயர்த்திக் காட்டியதற்கு விசேட வெகுமதிகளை பெறத் தகுதியுடையவரா? என்றால் உண்மையில் பதில் இல்லை என்றே வரும். ஏனெனில் அவர் அதிபராக நியமிக்கப்பட்டமைக்கான காரணம் அப்பாடசாலையின் கல்வி அபிவிருத்திக்காகத்தான். அதற்காகவே அந்த நியமனமும் பொறுப்புக்களும் அதிகாரங்களும்! அதைப்புரிந்து கொண்டவர்களுக்கு தமது தொழிலையும், சேவையையும் பிரித்துப் பார்க்கத் தெரியும்.

அவ்வாறே மக்கள் சேவையென்பது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வழங்கப்படுபவை அல்ல என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் புரிந்துகொள்ள வேண்டும்.

மக்கள் சேவை அதற்கும் அப்பால் இருக்கின்றது...

ஓய்வூதியம் பெறுமொருவரை மக்கள் அரசியல் தலைவராக தேர்வு செய்தால் அவர் அரசியற் பதவி ஊடகப் பெற்றுக்கொள்ளும் அனைத்தையும், சம்பளம் உட்பட, மக்கள் சேவைக்குப் பயன்படுத்தலாம். அதனை நாங்கள் மக்கள் சேவை எனலாம்..... அவ்வாறான தலைவர்களே நலிந்து கிடக்கும் தேசத்தின் தூண்களாக உருவெடுப்பவர்கள்..... எங்கிருந்தோ கிடைப்பவற்றை இங்கு பகிர்ந்கொடுப்பது சாமானியரின் வேலை... அதை யாரும் செய்யலாம் ..... அதுவா மக்கள் சேவை?.... புரிந்துகொள்வீர்களா?

## நோயுடன் திரியும் முதியவர்-கவனத்தில் கொள்ளாத சுகாதார அமைப்புக்கள்




திருகோணமலை, நகரத்தில் கடுமையான வியாதியொன்றினால் பீடிக்கப்பட்டுள்ள முதியவர் உருவர் நாளாந்தம் பிச்சை கேட்டுத் திரிவதாக மக்கள மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.


அவரது வாய் முழுவதுமாய அவிந்து சீழ் வழியும் நிலையில் அவர் பிச்சை கேட்டு வரும் போது இளையான்களுகம கொசுக்களும் அவரைச் சுற்றி பெருமளவில் படையெடுத்து வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

குறித்த முதியவர் தொடர்பாக உவர்மலை மக்கள் சுகாதார அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ள வேளையிலும் அவர்கள் தற்போதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிகின்றது.

## கேதீஸ்வரன், கேனுஜன் ஆகியோரின் கண்டுபிடிப்பில்

# "ஸ்மாட்" தெளிகருவி

### தேசிய மட்டத்தில் முதலாம் இடம் ஆனால் மாகாண மட்டத்திலோ 2ம் இடம்



மட்டக்களப்பு மாவட்ட கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட சித்தாண்டி-வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் இருவரின் முயற்சியினால் உருவாக்கப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட ஸ்மாட் தெளிகருவிக்கு (Smart Sprayer) தேசிய மட்டத்தில் முதலாமிடம் கிடைத்து சாதனையை தனதாக்கிக்கொண்டது.

2014ம் ஆண்டுக்கான சிறிய கண்டுபிடிப்பாளர்களை தெரிவுசெய்யும் முகமாக இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கிடையிலான புத்தாக்குனர் போட்டியில் இப்பாடசாலை மாணவர்களான கே.கேதீஸ்வரன் (தரம் 7) மற்றும் எஸ்.கேனுஜன் (தரம் 13) ஆகிய இருவரும் இணைந்து இந்த ஸ்மாட் தெளிகருவியை உருவாக்கித் தேசிய வெற்றியைப் பெற்றுள்ளனர்.

மாகாண மட்டத்தில் 2ம் இடம் பெற்ற தெளிகருவியானது தேசிய மட்டத்தில் முதலிடத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதேவேளை வெற்றிபெற்ற மாணவர்களை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவிக்கும் முகமாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் பாடசாலைக்கு வருகைதந்து வெற்றிபெற்ற மாணவர்கள் உட்பட ஆசிரியர்களுக்கும் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தார்.

# கிழக்கு மாகாணசபையின் 34வது அமர்வு

கிழக்கு மாகாண சபையின் 34 ஆவது அமர்வு திருகோணமலை உட்துறைமுகவீதி மகாணப் பேரவை மண்டபத்தில் தவிசாளர் ஆரியவத்தி கலப்பத்தி தலைமையில் செவ்வாய்கிழமை (11.11.2014) 9.30 மணியளவில் நடைபெற்றது.


2015ஆம் ஆண்டிற்கான நிதிப் பிரகடனத்தை கிழக்கு மாகாண முதலமச்சர் நஜீப் அப்துல் மஜீத் சமர்ப்பித்ததோடு கிழக்கு மாகாண பாலர் பாடசாலைக் கல்வி பணியக திருத்த நியதிச்சட்ட மூலத்தையும் சமர்ப்பித்தார். கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க அவர்களினால் 2009 ஆம் ஆண்டின் 02ஆம் ,லக்க கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவான கட்டளைகள் பிரமானங்கள் சபையின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சர்களிடமும், முதலமைச்சரிடமும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேள்விகளைத் தொடுத்தனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஞா.கிருஸ்னபிள்ளை கிழக்கு மாகாணத்திலுள்ள அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அனுமதி பெற்ற வெளிமாகாண மதுபானசாலைகளை மட்டக்களப்புக்கு மாற்றி 64 மதுபானசாலைகள் காணப்படுகின்றன. இவை மக்களின் வாழ்வைப் பலவிதத்திலும் பாதிக்கின்றன. மாவட்ட விகிதாசரப்படி 27 மதுபானசாலைகள் மாத்திரமே அமைக்க முடியும் எனவே மேலதிக மதுபானசாலைகளை அகற்றுவதற்கு கௌரவ முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? எனக் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுபானசாலை அதிகரிப்பு வீதத்தைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதற்கு அவகாசம் கேட்டுள்ளார்.

முன்னால் முதலமைச்சர் சந்திரகாந்தன் உரையாற்றுகையில் மகிந்த சிந்தனையின் அமுலாக்கல் திட்டத்தில் மது ஒழிப்பு இருக்கிறத் இதனை மட்டக்களப்பு மவட்டத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்போம் என்றார். த.கலையரசன், கு.நாகேஸ்வரன் ,சந்திரதாச கலப்பத்தி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களால் தனிநபர் பிரேரனைகள் சமர்ப்பிக்கப்பட்டன. (அச்சுதன்)

## காலம் கடந்த திருமணப் பதிவுச் சான்றிதழ்கள்

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் ஐரோப்பிய நிதி உதவியின் கீழ் மூதூர் பிரதேச செயலகத்திற்கு பாட்டாளிபுரம் எனும் கிராமத்தில் 11.11.2014 அன்று செவ்வாய்கிழமை திருமணச் சான்றிதழை வழங்கும் நிகழ்வு நடந்தேறியது

குறித்த நிகழ்வில் 25 சோடிகள் கலந்து கொண்டு தங்கள் திருமணப்பதிவினை பெற்றுக்கொண்டனர். குறித்த நிகழ்வு மூதூர் பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் திரு.கிருஸ்ணபிரியன் அவர்களின் வழிகாட்டலின் படி இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் மூதூர் நிலையத்தின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. (அச்சுதன்)



## புலமைப் பரிசில் சித்தி

2014ம் ஆண்டு இடம் பெற்ற 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் திருகோணமலை சேனையூர் மத்திய கல்லூரியின் மாணவன் செல்வன் ஆ. ரகுஷிகன் 159 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Times

### ஜனவரி 2ம் திகதி சனாதிபதித் தேர்தல்


ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

போப் பாண்டவரின் வருகைக் கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சனாதிபதித் தேர்தலை ஜனவரி மாதம் 2ம் திகதிக்கு முன் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவரும் வேளையில் எதிர்கட்சிகளின் பொது வேட்பாளரைத் தேடும் பணி கடும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொது வேட்பாளராகத் தனியொருவரைத் தெரியும் பணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளர் மலிக் சமரவிக்ரமவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியத் தலைவருக்கு மிக நெருக்கமானவர்.

முன்னாள் சனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க பொது வேட்பாளராக நியமிக்கப்படுவதற்கு அவரது குடும்ப உறுப்பினர்கள் பெரிதும் விரும்பவில்லை எனத் தெரிகின்றது.

### அணு சக்தி எதிர்ப்பு விடயத்தில் முடிவின்றித் தத்தளிக்கும் இலங்கை



ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது குழுவிற்கு முன்வைக்கப்பட்டுள்ள மனிதகுலத்திற்கு எதிரான அணு ஆயுதப் பாவிப்பு தொடர்பான இணைந்த அறிக்கை தொடர்பாக எவ்விதத் தகவலும் கிடைக்காமல் இலங்கையின் வெளிவிவகார அமைச்சு தத்தளித்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தால் இவ்வறிக்கை தொடர்பாக எவ்வித தகவல்களும் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப் படவில்லை.

இவ் இணைந்த அறிக்கையில் உலகின் 155 நாடுகள் கையெழுத்திட்டுள்ள நிலையில் இலங்கையைக் கையெத்திடும் படி கேட்கப் படவில்லை என்பதுடன் அணுஆயத விடயம் தொடர்பான இலங்கையின் விருப்பு வெறுப்புக்களை அறியாமலேயே இவ் அறிக்கை முதல் குழவிடயம் கையளிக்கப்பட்டுள்ளது.

### நாளாந்தம் 1000 மோட்டார் சைக்கிள்கள் பதிவு

கடந்த மாதம் சராசரியாக நாளாந்தம் ஆயிரம் மோட்டார் சைக்கிள்கள் வாகனப் பதிவுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் மொத்தமாக 35,614 மோட்டார் சைக்கிள்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் மாதங்களில் மேலும் 150,000 சைக்கின்களைப் பதிவு செய்ய எதிர்பார்த்திருப்பதாக மோட்டார் திணைக்கய ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

### ஒரு மில்லியன் ரூபா செலுத்தினால் பிரத்தியேக வாகன இலக்கங்கள்.

அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பத்திரமொன்றின் மூலம் வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் இலங்கையில் கொள்வனவு செய்யும் வாகனங்களுக்கென பிரத்தியேகமான இலக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் நிலை தோற்றுவிக்கப்படவுள்ளது.

இவ்வாறு பிரத்தியேக எழுத்துக்கள் இலக்கங்களுடன் கூடிய வாகனப் பதிவிலக்கத்தைப் பெற்றுக்கொள்ள பத்து லட்சம் ரூபாய்கள் கட்டணமாக அறவிடப்படும் எனவும் அப்பத்திரத்தின் ஏற்பாடுகள் தெரிவிக்கின்றன.

இப்பிரத்தியேக இலக்கத் தகடுகளில் தமக்கு விருப்பமான நிறங்களையும் சேர்த்துக்கொள்ள முடியும். இத்திட்டத்தை ஸ்ரீலங்கா இன்போமேசன் கொம்யூனிகேசன் இன்ஸ்டிடியூட் உடன் இணைந்து பிரத்தியேக மென்பொருளொன்றை உருவாக்கி வழங்க முடியும் எனவும் அப்பத்திரத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

## Observer

### குழந்தைகளுடன் தொடர்புறுவோரின் பின்புலம் தோண்டப்படும்

குழந்தைகளையும் இளம் தலைமுறையினரையும் பாதுகாக்கும் முனைப்புடன் அவர்களுடன் தொடர்புகொண்டு அவர்கள் சார்பாகப் பணியாற்றும் அலுவலர்களின் பின்புலம் தொடர்பாக விசாரணை செய்ய ஏதவான சட்டங்களை உருவாக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இச்சபையின் தலைவரால் ஏற்கனவே அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பத்திரமொன்றில் இவ்விடயத்தையும் உள்ளடக்கிய சட்ட மூலமொன்றான "குழந்தைகளுடன் வேலை செய்யும் சட்டம் - வேர்க்கிங் வித் சில்ரண்ட் அக்ட்" சேர்க்கப்பட்டுள்ளது.

### இறையாண்மையைக் கேள்விக்குள்ளாக்கிய ம.உ.சபையின் ஊடக அறிக்கைக்கு கண்டனம்




ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையானது இலங்கையின் இறையாண்மை யைப் பாதிப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது.

இலங்கை மேற்கொண்டுள்ள விசாரணைகள் தொடர்பாக இச்சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை இலங்கையின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் வசப்படுத்துவதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள அரசு, மனித உரிமைகள் தொடர்பாகவும் கடலாயுதத் தடை தொடர்பாகவும் இலங்கை ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புபட்டு வேலைசெய்யும் விதமானது இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான நெருங்கிய செயற்பாட்டுறவை வெளிக்காட்டும் பல விடயங்களில் இரண்டு உதாரணங்கள் எனத் தெரிவித்துள்ளது.

## ஆங்கில இணையத் தளச் செய்திகள்

### "சீனர்களே! கவனம்" எச்சரிப்பது ஐ.தே.க



ஆட்சி எம்மிடம் வருமாயின் தற்போதைய அரசினால் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்கள் பலவற்றைத் தூக்கியெறிந்து விடுவோம் என ஐக்கி தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எச்சரித்துள்ளார்.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே போட்டியை உருவாக்க முய்றிசிக்கும் தற்போதைய அரசின் செயற்பாடுகளை தமது ஆட்சி அடியோடு கைவிட்டுவிடும் என்பதுடன் இந்தியாவிற்கே தமது ஆட்சியில் முதலிடம் கொடுக்க்ப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

### சனாதிபதியின் பயணச் செலவு 2014ல் 2500 மில்லியன்



சனாதிபதியின் பயணச் செலவு 2014ம் ஆண்டில் 2500 மில்லியனைத் தாண்டியுள்ளதாக நா.உ அனுரகுமார திசானாயக்க கூறியுள்ளார்.

உள்ளக போக்குவரத்துக்கு 22 மில், வெளிநாட்டுச் செலவு 800 மில், எரிபொருளுக்கு 410 மில், வாகனப் பராமரிப்பிற்கு 317 மில், மற்றும் ஏனைய போக்குவரத்துச் செலவு 570 மில் என அவர் மேலும் செலவைப் பட்டியலிட்டுள்ளார்.

## The Leader

### சண் மாஸ்டர் நாட்டை விட்டுத் தப்பியோட்டம்

ஐ.நாவின் மனித உரிமைச் சபைக்கு ஆவணங்களை வழங்கவென வெற்று ஆவணங்களில் கையெழுத்தைத் திரட்டியதாகச் சந்தேகிக்கப்படும் மற்றொரு சந்தேக நபரான சண் மாஸ்டர் என அழைக்கப்படும் ஆழ்வார்பிள்ளை விஜயேந்திரகுமார் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

அவர் நீர்கொழும்பில் இருந்து புறப்பட்டு மீன் பிடிப்படகொன்றின் உதவியுடன் தமிழ்நாட்டுக்குத் தப்பிச் சென்றிருக்க வேண்டும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் கைது செய்யப்பட்டிருந்தால் யாருக்காக அவர் இந்த வேலைகளைச் செய்தார் என்பது தெரியவந்திருக்கும்.

### அடையாள அட்டைகளை வெளிநாட்டுக்குக் கொண்டு செல்ல வேண்டாம்



இலங்கையர்கள் வெளிநாடுகளுக்குப் பயணிக்கும் போது அடையாள அட்டைகளை எடுத்துச் செல்வது தொடர்பான தனது கரிசனையை ஆட்பதிவுத் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது.

சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் எழுத்துக்களைக் கொண்டுள்ள ஆளடையாள அட்டையை வெளிநாடுகளில் எந்தத் தேவைக்கும் பயன்படுத்தமுடியாது என்பதால் அடையாள அட்டைகளை வெளிநாட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டாம் என்று ஆட்பதிவுத் திணைக்கள இணை ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

## Ceylon Today

### இஸ்லாமிய ஜிஹாதிகளை எதிர்கொள்ளச் சீனாவுடன் கூட்டு – இந்தியா

ஆசியாவில் அதிகரித்துவரும் இஸ்லாமிய தீவிரவாதத்தின் சவாலை எதிர்கொண்டு அழிப்பதற்கு சீனாவுடன் தந்திரோபாயக் கூட்டொன்றை இந்தியா உருவாக்கும் என ஆளும் பி.ஜே.பி கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆப்கான் மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளிலும் இருந்து உருவாகிவரும் இஸ்லாமியத் தீவிரவாதத்தினை எதிர்கொள்ள வேண்டுமாயின் சீனா இந்தியாவுடன் நெருங்கி வரவேண்டிய தேவையுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர் சீனா பாகிஸ்தானுடன் நெருங்கிய தொடர்பைத் தற்போது பேணி வருகின்றதெனினும் அதன் மாகாணங்களில் ஒன்றான சின்ஜியாங் பிரதேசத்தில் பெருமளவு முஸ்லிம்கள் வாழ்வதால் சிதையாத் தன்மையையும் ஒற்றுமையையும் சீனாவில் பேண வேண்டுமாயின் இந்தியாவுடன்தான் சீனா உறவுகளைப் பேண முன்வர வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### இலங்கை மின்சபை கேள்வி நடைமுறையை மீறியுள்ளது

இலங்கையின் மின்சார சபையானது நிலக்கரி கொள்வனவில் கேள்வி நடைமுறையைப் பின்பற்றாது அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிடம் இருந்து நிலக்கரியைக் கொள்வனவு செய்யும் முடிவை எடுத்துள்ளதாக தேசிய மின்நுகர்வோர் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளது.

அடுத்துவரும் ஆறு மாதங்களுக்கு நிலக்கரியைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.


ஜூலை 2014ல் கேள்விகள் கோரப்பட்டிருந்த போது 6 நிலக்கரி வழங்குனர்கள் தமது விலைகளை மிகப் போட்டித்தன்மையுடன் வெளிப்படுத்தி யிருந்தனர். எனினும் அவர்களில் நால்வரை தொழில்நுட்பக்காரணங்களால் தவிர்த்திருந்ததுடன் எஞ்சிய இருவரையும் அமைச்சரவை தவிர்த்திருந்தது என இச்சங்கம் தெரிவித்தள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஆய்வு

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் யாருக்கு!!?

கே.சஞ்சயன்



எதிர் வரும் ஜனவரி மாதம் நடைபெறுமென்று வலுவாக எதிர் பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு யாருக்கு என்ற கேள்வி இப்போது முதன்மை பெறத் தொடங்கியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலும் கிழக்கிலும் கொண்டுள்ள வாக்கு வங்கி, இத்தேர்தலில் மிகவும் முக்கியமானதொரு விடயமாகக் கருதப்படுகிறது.

சுமார் நான்கு இலட்சம் தமிழர்களின் வாக்குகளை வைத்துக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதித் தேர்தலில் பேரம் பேச முனைவதாக, அண்மையில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான அமைச்சர் விமல் வீரவன்சவின் காழ்ப்புணர்வை காட்டுவதாக மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தை, கொழும்பின் பிரதான அரசியல் கட்சிகள் உணர்ந்துள்ளன என்பதையே முக்கியமாக சுட்டி நிற்கிறது. விரும்பியோ, விரும்பாமலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த ஜனாதிபதித் தேர்தலில், சக்திவாய்ந்ததொரு தரப்பாக பார்க்கப்படுகிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

கடந்த வருடம் நடைபெற்ற வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 353,595 வாக்குகளை பெற்றிருந்தது. அதுபோலவே, 2012ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு 193,827 வாக்குகள் கிடைத்திருந்தன. இதன் மூலம், வடக்கிலும் கிழக்கிலும் அண்மைய தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மொத்தமாக 547,422 வாக்குகளை பெற்றிருக்கிறது.

நாட்டின் ஏனைய பகுதிகளில், சில ஆயிரம் வாக்குகளைக் கொண்ட கட்சிகளையும் அமைப்புகளையும் தம்பக்கம் இழுத்துவிட்டு, பெரிதாக தம்பட்டம் அடிக்கும் பிரதான அரசியல் கட்சிகளுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்தரை இலட்சம் வாக்குகளும் அவ்வளவு சாதாரணமான தொன்றாக இருக்கமுடியாது.

மாகாணசபைத் தேர்தல்களில் கிட்டத்தட்ட ஐந்தரை இலட்சம் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றிருந்தாலும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் பொதுவாக அக்கறைகொள்வது குறைவு. இதனை கருத்திற் கொண்டு பார்த்தால், சுமார் நான்கு முதல் நான்கரை இலட்சம் வாக்குகளை தீர்மானிக்கும் சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருக்கப்போவது உறுதி.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், அரச தரப்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார். அதற்கு தடையேதும் உள்ளதா என்ற உயர்நீதிமன்றத்தின் கருத்தை கேட்டிருந்தார். இந்நிலையில், உயர்நீதிமன்றத்தின் கருத்து அவருக்கு சாதகமாக அமைந்துவிட்டதால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

அதேவேளை, எதிர்க்கட்சிகளின் தரப்பில் யார் போட்டியிடப்போவது என்பது இன்னமும் உறுதியாகவில்லை. எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் விடயத்தில் நெருங்கி வந்துவிட்டன.

ஊவா மாகாணசபைத் தேர்தலை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிடுவார் என்றதொரு நிலை உருவானது. ஆனால், ஐ.தே.க. வுக்குள், நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எழுப்பிய புயலும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) உள்ளிட்ட சில கட்சிகளும் அமைப்புகளும் ரணிலை ஆதரிப்பதற்கு மறுத்தமையும் கடைசி நேரத்தில் அவர் ஒதுங்கிக்கொள்ளும் நிலையை ஏற்படுத்திவிட்டது.

அதுபோல, போட்டியிலிருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட உத்தேச பொதுவேட்பாளர்களும் இப்போது பின்னரங்குக்கு வந்துள்ளனர். இந்தக் கட்டத்தில், ஐ.தே.க. வின் பிரதித் தலைவர்களில் ஒருவரான கரு ஜெயசூரியவே பொதுவேட்பாளராக நிறுத்தப்படலாமென்று எதிர்பார்க்கப் படுகிறது. இரு தரப்பிலும் யார் வேட்பாளராக நிறுத்தப்பட்டாலும், கடுமையான போட்டி இருக்குமென்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால், இப்போது, அரசாங்கத்துக்கு ஆதரவான எந்த அலையும் கிடையாது.

அதேவேளை, எதிர்க்கட்சிகளின் தரப்பில் மிகப் பெரியளவில் கவர்ச்சியான வேட்பாளர் எவரும் நிறுத்தப்படும் வாய்ப்பும் இல்லை.

எனினும், அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தி அலையும் எதிர்க்கட்சிகளின் வாக்கு வங்கியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான போட்டியை கொடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சிங்கள மக்களின் ஆதரவு என்பது இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையில், சம அளவில் பிரிந்துபோகும் சூழலை உருவாக்கியுள்ளது. இது இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முக்கிய கட்டம் எனலாம்.

ஏனென்றால், இம்முறை 50 சதவீத வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெறமுடியாது போகலாமென்ற கருத்து பலரிடமும் காணப்படுகிறது. 50 சதவீத வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெறமுடியாமல் போனால், இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கை நடத்தப்படவேண்டிய கட்டாயம் உருவாகும். இத்தகைய நிலை இதற்கு முன்னர் ஏற்பட்டிருக்கவில்லை.

1982இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 52.91 சதவீத வாக்குகளையும் 1988இல் பிரேமதாச 50.43 சதவீத வாக்குகளையும் 1994இல் சந்திரிகா குமாரதுங்க முதல் தடவை 62.28 சதவீத வாக்குகளையும் 1999இல் இரண்டாவது தடவை 51.12 சதவீத வாக்குகளையும் 2005இல் மஹிந்த ராஜபக்ஷ முதல் தடவை 50.29 சதவீத வாக்குகளையும் 2010இல் இரண்டாவது தடவை 57.88 சதவீத வாக்குகளையும் பெற்று ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தனர். எனவே, 50 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறுவது, இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கையில் வெற்றியைத் தீர்மானிப்பது என்பன இம்முறை முக்கியமான தேர்தல் வியூகங்களாக இருக்கும்.

சிங்கள வாக்காளர்களின் வாக்குகள் சம அளவிலோ, சற்று ஏறக்குறைவாகவோ இரு வேட்பாளர்களுக்கும் இடையில் பிரிந்து போகக்கூடியதொரு சூழலில், சிறுபான்மையினரின் வாக்குகளே பெறுமதிமிக்கவையாக இருக்கப்போகின்றன. அதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கி எல்லாத் தரப்பாலுமே குறி வைக்கப்படுமொன்றாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. கிட்டத்தட்ட நான்கரை இலட்சம் வரையான தமிழ் மக்களின் வாக்குகளை திரட்டும் ஆற்றலைக் கொண்டிருப்பதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை பேரம் பேசுவதில் முக்கிய பங்கை ஆற்றுமென்று எதிர்பார்க்கலாம்.

ஏற்கெனவே ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கவேண்டுமென்றும் அதன் மூலம் நல்லதொரு செய்தியை வழங்கி, புதியதொரு ஆரம்பத்துக்கு அடித்தளம் இடலாமென்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமிழ் நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்திருந்தார்.

அதுபோலவே, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்லவும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியுடன் இணைந்து, தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டுமென்று கூறியிருக்கிறார். இவை இரண்டும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடயத்தில், இரண்டு தரப்புமே கொண்டுள்ள அக்கறையை காட்டுகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை புலிகளின் பதிலிகள் என்றும் புலிகளின் வழிகாட்டலில் செயற்படும் கட்சியென்றும் விமர்சித்த அரசாங்கம், இப்போது தேர்தல் வந்ததும் அதையெல்லாம் மறந்துவிட்டு கூட்டமைப்பிடம் ஆதரவு கேட்டுள்ளது. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய முடிவை எடுக்கப்போகிறது என்ற வினா நீடித்துவருகிறது. கடந்த சில மாதங்களாக இது பற்றிய கேள்விகள் எழுந்துகொண்டிருக்கின்றன. பல்வேறு ஊகங்களும் வெளியாகின்றன. ஆனால், அவசரப்பட்டு யாருக்கும் ஆதரவு அளிப்பதாக வாக்குறுதி கொடுக்க இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவில்லை.

ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பெறுமானத்தை உணர்ந்து, இதனை தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற எதிர்பார்ப்பதில் இருப்பதாகவே தெரிகிறது.

தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவேட்பாளருடன், பேரம் பேசி எழுத்து மூலமான உடன்பாடொன்றில் கையெழுத்திட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எண்ணியுள்ளதாகத் தெரிகிறது. எவ்வாறாயினும், அரச தரப்பிலிருந்து விடுக்கப்படக்கூடிய அழைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதாசீனப்படுத்த தயாரில்லை.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ விடுத்த அழைப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்த அழைப்பை திறந்த மனதுடன் பரிசீலிக்கத் தயாரென்று கூறியுள்ளார்.

அரச தரப்பு எத்தகைய இராஜதந்திரத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்ததோ, அதேபோன்ற இராஜதந்திரத்துடனேயே இரா.சம்பந்தனும் இதனை அணுக முற்பட்டுள்ளார் என்று தெரிகிறது.

அதேவேளை, தமக்கு இது பற்றி அதிகாரபூர்வமான முறையில் அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதையும் அவ்வாறு அழைத்தால் அதைப் பரிசீலிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் பசில் ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை ஆழம் பார்க்கவே, ஊடகங்களின் மூலம் இந்த அழைப்பை விடுத்திருக்கிறார் என்று கருதவேண்டும். அதற்கேற்றவாறு எடுத்த எடுப்பிலேயே இந்தக் கோரிக்கையை நிராகரித்துவிடாமல், தந்திரமான முறையில் பதிலளித்துள்ளார் இரா.சம்பந்தன்.

ஆனால், அரச தரப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்குவதென்பது மிகவும் கடினமானதொரு காரியமாகவே இருக்கும். ஏனென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதோ, தமிழ் மக்களினதோ நம்பிக்கையை காப்பாற்றும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ அவரது அரசாங்கமோ இதுவரை செயற்பட்டிருக்கவில்லை. முன்னர் கொடுத்திருந்த வாக்குறுதிகளையும் காப்பாற்றியிருக்கவில்லை.

அதை விட வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களிடையில் நிலவும் அரச எதிர்ப்பு அலையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் தீவிரக் கருத்துடையோரின் ஆதிக்கமும் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்கும் முடிவொன்றை எடுப்பதற்கு கடுமையான சவாலை கொடுக்கும்.

அரச தரப்பின் கோரிக்கையை பரிசீலிக்கலாமென்ற இரா.சம்பந்தனின் கருத்து, அரச தரப்பை ஆதரிப்பதற்கு தயாரென்று அர்த்தமாகாது.

அரசியலில் எதுவும் நடக்கலாம். அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை, நிரந்தர நண்பனும் இல்லையென்றும் கூறுவதுண்டு. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகாவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்ததை, அதுபோல ஒன்றாகத்தான் கருதவேண்டும். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடயத்தில் அத்தகைய அபூர்வமொன்று நிகழ்வதற்கு சாத்தியம் குறைவு.

அதேவேளை, இம்முறை ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் துவேசத்துடன் அணுக்கக்கூடாது என்ற கருத்தையும் இரா.சம்பந்தன் வெளிப்படுத்தியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. அதாவது, இதுவரையில் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலை பெரிதாக எடுத்துக்கொள்வதுமில்லை அதற்கு ஆதரவு அளிப்பதுமில்லை. ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழர்களின் வாக்களிப்பு வீதம் மிகமிகக் குறைவாகவே இருந்திருக்கிறது.

கடந்த முறை எதிர்க்கட்சிகளால் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்திருந்தபோதும், தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிப்பதற்கு ஆர்வம் காட்டவில்லை. போருக்கு அவர் தலைமை தாங்கியிருந்ததும், அப்போரின் இரத்தவாடை கூட அகலாத நிலையில், அந்தத் தேர்தல் நடந்ததும் அதற்கு ஒரு காரணம் என்பதை மறுக்கமுடியாது.

அதுபோன்றோ அல்லது தமக்குச் சார்பாக செயற்படாத ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்வதால் என்ன பயன் என்றோ, ஒதுங்கியிருக்காமல் செயற்பட வேண்டுமென்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்பார்ப்பாக தெரிகிறது. இத்தகைய கட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை தேர்தல் புறக்கணிப்பு முடிவையோ அல்லது ஒதுங்கியிருக்கும் முடிவையோ எடுக்குமென்று கருதுவதற்கில்லை. ஏதோவொரு வேட்பாளரை ஆதரித்து, அவர் மூலம் தீர்வொன்றை எட்டவே முயற்சிக்கும்.


ஆனால், அது எந்தளவுக்கு சாத்தியமாகும்? இந்த பேரம் பேசும் இராஜதந்திரக் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் இலக்கு எட்டப்படுமா என்பதை, கூட்டமைப்பு ஆதரிக்கப்போகும் வேட்பாளரின் வெற்றியின் மூலம் மட்டுமே தீர்மானிக்கப்படாது. அந்த வேட்பாளர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எட்டக்கூடிய உடன்பாட்டை நிறைவேற்றும் அர்ப்பணிப்பை கொண்டவராக இருத்தல்வேண்டும்.

நன்றி தமிழ்மிரர் (www.tamilmirror.lk)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...நாட்டு நடப்பு...

# இப்படியும் ஐந்தறிவு துரோகிகள்!!




சாரங்கனின் தாய்மாமனின் பெயர் சண்முகம் இவர்கள் இருவரும் அப்பிரதேசத்தில் தீய நடவடிக்கைகளுக்கு மிகவும் பிரபல்யம் வாய்ந்தவர்கள். அது மாத்திரமல்ல மாமன், மருமகனாக உறவு அவர்களுக்கிடையே இருப்பதை விட இரண்டு பேரும் இணைபிரியாத நண்பர்கள் என்றுதான் கூறவேண்டும்.

சண்முகத்தின் மூத்த சகோதரி சாரதா தேவியின் இளைய மகனே சாரங்கன். அவனுக்கு வயது பதினெட்டு. அந்த வயதிலே சண்முகம் தனது மூத்த சகோதரிக்கு தெரியாமல் திருட்டுத்தனமாக அவனுக்கு திருமணம் செய்து வைத்து விட்டான். சண்முகம் சாரங்கனை விட நான்கு வயதிற்கு மூத்தவன். ஆனால் அவன் இருபத்தொரு வயதில் திருமணம் செய்து கொண்டாலும் இதுவரை பிள்ளைகள் ஒன்றும் இல்லை.

இவ்விருவரும் எந்தவித பொறுப்புக்களும் இன்றி ஊரை சுற்றி திரிபவர்கள். வீட்டில் மாமனார், மாமியாரின் புண்ணியத்தில் வேளா வேளைக்கு மூன்று நேரமும் சாப்பாடு மற்றும் உடுதுணிகள் கிடைப்பதால் உழைத்து குடும்பத்தை காப்பாற்ற வேண்டுமென்ற நிலைமை இறைவனே என்று அந்த இருவருக்கும் இல்லை.

மேலும் நேரத்திற்கு சாப்பாடு, உடுதுணி மாத்திரமல்ல கைச்செலவுக்கு வேண்டிய பணம் கூட மனைவிமாரின் வழியில் கிடைப்பதால், சந்தோசமான வாழ்க்கைக்கு அங்கு ஏது தடை? நம் நாட்டில் இன்று எத்தனையோ பேர் மனைவிமாரின் வழியை நம்பி காலத்தை ஓட்டிக்கொண்டே செல்கின்றனர்.

சில குடும்பங்களில் அந்த மாமன்மார், மாமிமார் தம் பேரப்பிள்ளைகளை படிப்பித்து, ஆளாக்கி, சீதனம் கொடுத்து திருமணங்களைக் கூட நடாத்தி வைத்த சம்பவங்கள் பல. மேலும் குடும்ப இனவிருத்திக்கு எப்படியோ ஒருவர் தேவைதானே? இருந்திட்டுப் போகட்டும் என்று சிலர் தம் மருமக்கள் மீது பாசமழை பொழிவதை எமக்கென்ன தெரியாமலா? ஆனால் சில கஷ்டமான குடும்பங்களில் பெண் எடுத்தவர்களில் பலர் எப்படியோ உழைத்து தம் பெற்றோரை கவனிப்பது போன்று தம் பிள்ளைகளையும், மன்னவி வழியையும் கவனிக்காமல் விட்டதல்ல.

மது, மங்கை, சூது, கொள்ளை, கொலை என்றெல்லாம் அவர்களின் செயற்பாட்டை அடுக்கிக் கொண்டே போகலாம். நன்மைகளை விரும்பி செய்பவர்கள் போன்று தீமைகளையும் மனம் விரும்பி செய்பவர்கள் சமூகத்தில் இல்லாமலா என்ன? நன்மைகளை விரும்பாதவர்கள் தீமைகளையும், தீமைகளை விரும்பாதவர்கள் நன்மைகளையும் சமூகத்தில் புரிந்து வருவது இன்று நேற்றல்ல. உலகத்தில் சகல நாடுகளிலும் வணக்க ஸ்தலங்கள் உண்டு. அவ்வாறே சிறைக்கூடங்களும் உண்டு. சிறைக்கூடங்களில் இருந்து நல்வழிப்படுத்தப் பட்டவர்கள் வணக்க ஸ்தலங்களில் இல்லையா?

எது சரி? எது பிழை? என நாமே தனித்து முடிவெடுத்து முன்செல்லும் வரை நாம் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும். அது மாத்திரமல்ல பாவ, புண்ணியங்களை கற்றறிந்து அதனால் ஏற்படும் விளைவுகளை புரிந்து கொண்டால் நிச்சயம் நாம் தீயவர்களாக வாழ சந்தர்ப்பமே கிடைக்காது. சாரங்கனும், சண்முகமும் இணைபிரியாத நண்பர்களாக அப்பிரதேசத்தில் நடமாடுவது சமூகத்திற்கு நன்மை புரிவதற்கல்ல. அவர்களின் முழு நோக்கமும் இன்னுமொருவரை இம்சைப்படுத்தி அதில் இலாபம் காணுவதே. ஒரு மாதத்தில் அவர்கள் இருபேரில் ஒருவர் தவறாது சிறை செல்வது வழமை. ஒருவர் உள்ளே இருந்து வெளியில் வரும்வரை வெளியில் இருப்பவர் உள்ளே இருப்பவரின் மனைவியுடன் குடும்பம் நடத்துவார். இது சுழற்சி முறையிலான குடும்ப வாழ்க்கையாகும். இந்த சுழற்சி முறையிலான திட்டமானது அவர்களைப் பொறுத்தவரையில் பராமரிப்பு, பாதுகாப்பு போன்றவைகளை தத்தம் மனைவிமார்களுக்கு தாம் ஊரில் இல்லாத வேளைகளில் பெற்றுக் கொடுக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

நம் எல்லோர்க்கும் எதிர்காலத் திட்டமென்ற ஒன்று உண்டு. ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில் அப்படியொரு திட்டமும் இல்லை. அவ்வாறான ஒன்று இருப்பதாக அவர்கள் அறிந்தும் இருக்கவில்லை. ஏதொ பொழுது விடிந்து அது சாயும் வரை தான் உலகம் என நினைத்து வாழ்ந்தனர். அடுத்த நாளைப்பற்றி சிந்திப்பதே இல்லை.

அப்பகுதியில் வாழும் கல்யாணி என்பவள் ஒரு விதவை. 2004ம் ஆண்டு தாண்டவமாடிய கொடூர சுனாமியால் தனது கணவரை இழந்தவள். தனது வயது வந்த இரண்டு பெண்பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறாள். பிரதேசத்தின் நிலைமை அறிந்து அப்பிள்ளைகளை தனியே எங்கும் அனுப்புவதே இல்லை. சமூக சேவையில் ஈடுபாடு கொண்ட அவள் அப்பகுதி மரண உதவிச் சங்கத்தின் பொருளாளராக செயல்படுகிறாள்.

ஒரு மாதத்தில் இரு தடவைகள் அங்கத்துவப் பணத்தை சேகரித்து மாத இறுதியில் மக்கள் வங்கியில் வைப்பு செய்வது சங்கத்தினால் அவளுக்கு வழங்கப்பட்ட கடமைகளில் முக்கியமான ஒன்றாகும். அப்பகுதி கிராம அபிவிருத்தி சங்க பணிமனையிலே அங்கத்துவப் பணம் சேகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவது வழமை. அங்கத்தவர்களின் வசதி கருதியே இரு தடவைகள் பணம் சேகரிக்கப்பட்டு வந்தது.

அன்று ஞாயிற்றுக் கிழமை சங்கப்பணம் சேகரிக்கும் நாள். அன்று, கடும் மழையும் கூட. மேலும் மழை சற்று ஓயம் வரை வீட்டில் பிள்ளைகளுடன் இருந்துவிட்டு, அவர்களிடம் 'நான் வரும் வரை வெளியில் வரக்கூடாது, யார் கூப்பிட்டாலும் கேட்டை திறக்கக்கூடாது' என கடும் கட்டளையை பிள்ளைகளுக்கு வழங்கி அங்கிருந்து புறப்பட்டாள் கல்யாணி.

அவளது வீட்டிலிருந்த ஒரே ஒரு குடையையும் எலி கடித்து உபயோகிக்க முடியாத நிலையில் வைத்துவிட்டது. சொப்பிங் பேக் ஒன்றை கிழித்து தனது தலைக்கு ஏற்றவாறு போட்டுக் கொண்டு கல்யாணி சங்கப் பணிமனைக்குச் சென்றாள். அவள் வரும் வரையும் பணம் செலுத்துவதற்காக உறுப்பினர்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

அங்கு வந்தவர்களிடம் சங்கப்பணத்தை சேகரித்து பற்றுச்சீட்டுக்களை உரியவர்களிடம் வழங்கிவிட்டு, பணத்தை தனது கைப்பைக்குள் வைத்துக் கொண்டு, வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தாள். நேரம் 6 மணியாக இருந்தாலும் மழை காரணமாக ஆகாயம் மங்கிய நிலையில் காணப்பட்டது. மழை காரணமாக பலர் வீட்டுக்குள் முடங்கிக் கொண்டனர். அந்த வீதியில் சனநடமாட்டம் மிக குறைவாக காணப்பட்டது.

வழியில் மழை அதிகரிக்கவே கல்யாணி சந்தியிலுள்ள கடையொன்றின் தாவாரத்திற்குள் ஒதுங்கிக் கொண்டாள். அப்பொழுது அந்த கடைக்குள் இருந்து தேனீர் அருந்திவிட்டு வெளியில் வந்த அப்பகுதி கிராமச் சேவை உத்தியோகத்தர் அவள் அங்கு தனித்து நிற்பதை அவதானித்துவிட்டு 'கல்யாணி என்ன இந்த மழைக்குள்ள?' என்று கேட்டார்.

அதற்கு கல்யாணி 'இல்ல சார்... இண்டைக்கு சங்கப்பணம் சேகரிக்கிற நாள். அதுதான்... ' 'அது சரி. இப்ப எப்படி வீட்டுக்குப் போகப்போறீங்க? கையில குடையும் இல்ல....' என்றார். கல்யாணி ஒரு சமூக சேவகி என்ற வகையில் அனைவரும் அவளுடன் மிக அன்பாக பழகினர்.

பின்னர் கிராம சேவை உத்தியோகத்தர் 'பொறுங்க கொஞ்சம்' என்று கூறி கடைமுதலாளியிடம் கத்தியொன்றை வாங்கி அருகிலுள்ள பனை வடலியில் ஒரு பனை ஓலையை வெட்டி அவள் கையில் கொடுத்துவிட்டு அவர் தனது உந்துருளியில் தனது வீட்டுக்குப் புறப்பட்டார்.

கல்யாணி அந்த ஒற்றையடிப் பாதை ஊடாக தனது தலையை நனைய விடாது அந்த பனை ஓலையால் மறைத்துக் கொண்டு சென்றுகொண்டிருந்தாள். அவ்வேளையில் அவ் வீதியில் ஒருவருமே பயணிக்கவில்லை. மழை தூறிக் கொண்டே இருந்தது. முன்னால் வருபவர்களை அடையாளம் காணக் கூட முடியாதிருந்தது.

அச்சமயம் வீதியின் அருகிலுள்ள பற்றைக்குள் இருந்து இரண்டு உருவங்கள் திடீரென அவள் மேல் பாய்ந்து அவளின் வாயை இறுக்கி மூடிக்கொண்டன. அவளால் உரக்க சத்தம் கூட போட முடியாமல் போனது. அருகிலுள்ள அடர்ந்த புதர் பகுதிக்குள் அவளை இழுத்துச் சென்று பலாத்காரமாக அவளின் கற்பை சூறையாடி, அவள் மயக்கமற்ற நிலையில் இருந்த பொழுது அவளின் கைப்பைக்குள் இருந்த சங்கப்பணத்தையும், கழுத்திலும், காதிலும் அவள் அணிந்திருந்த தங்க நகைகளையும் கழட்டி எடுத்துக் கொண்டு ஓடிச் சென்றவர்கள், பாதிவழியில் மீண்டும் அவ்விடத்திற்கு திரும்ப வந்து அவளின் கழுத்தை நெரித்து கொன்று விட்டு சென்றனர்.

அந்த கிராம உத்தியோகத்தர் சந்தி யிலுள்ள



கடைக்கு மீண்டும் தனது உந்துருளியில் சென்று கொண்டிருந்த போது கல்யாணியின் வீட்டுக்கு முன் சனக்கூட்டத்தைக் கண்டு அங்கு சென்று விசாரித்தார்.

அப்பொழுது நேரம் இரவு 8 மணியாக இருந்தது. அவளின் பிள்ளைகள் இருவரும் தேம்பி, தேம்பி அழுது கொண்டிருந்ததைக் கண்டு அவர்களை ஆறுதல்படுத்தி விட்டு, தான் அவர்களின் தாயாரை சந்திக் கடையில் பிற்பகல் 6 மணிபோல் கண்டதாக கூறிவிட்டு உடனடியாக கல்யாணி வந்து கொண்டிருந்த ஒற்றையடி வழியாக விரைந்து அவளை தேடிச் சென்றார்.

கிராம சேவை உத்தியோகத்தர் எப்படியோ சம்பவம் நடந்த இடத்தைக் கண்டு பிடித்து அவ்விடத்திற்கு பொலிசாரை உடனடியாக வரவழைத்தார். அங்கு ஒரு முக்கிய தடயப்பொருளை பொலிசார் கண்டுபிடித்திருந்தனர். இந்தக் காலத்தில் இவ்விதமான சம்பவங்களை இலகுவில் கண்டுபிடிக்க கூடிய தொழிநுட்பமும், நல்ல தேர்ச்சியும் காவல்துறையினருக்கு உண்டு என்பதனை மறந்துவிட முடியாது.

குறித்த தடயப் பொருளைக் கொண்டு கல்யாணியின் கொலைக்கு காரணமாக இருந்த அந்த மர்ம உருவங்களை காவல்துறையினர் கண்டுபிடித்து குற்றவாளிகளை நீதிமன்றம் முன் நிறுத்தினர். அந்த மர்ம உருவங்கள் சார்பில் பிணைக்காக சமர்ப்பிக்கப்பட்ட மனு கூட எந்தவித காலவரையின்றி மன்றினால் நிராகரிக்கப்பட்டது.

அந்த மர்ம உருவங்கள் வேறு யாருமல்ல. அப்பகுதியில் தீய செயல்களுக்கு தங்களுக்கென்ற ஒரு தனிஸ்தானத்தை வகுத்துக் கொண்ட சாரங்கனும் சண்முகமுமே. குறித்த கொலை தொடர்பாக காவல்துறை பொறுப்பதிகாரி ஊடகவியலாளரின் கேள்விக்கு பதிலளிக்கையில் இவ்வாறு கூறினார். 'சாரங்கனும், சண்முகமும் அப்பிரதேசத்தில் இருக்கும் வரை இவ்விதமான எந்தவித குற்றச் செயல்களை புரிந்திருந்தார்கள். ஒன்று கொலை, அடுத்தது கொள்ளை. சம்பவம் நடந்த இடத்தில் அவர்களில் ஒருவருடைய 'அலைபேசி' கைவிடப் பட்டிருந்தது. அதுதான் சம்பவத்திற்குரிய முக்கிய தடையப் பொருள். காவல் துறையினரால் அது நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாது குற்றம் நிரூபிக்கப்பட்டு குறித்த நபர்களே கொலைக்கும் கொள்ளைக்கும் காரணமானவர்கள் என்பதை மன்று ஏற்றுக்கொண்டது.

**- பாலையூற்றான் -**





## உயிர் காத்த சிறுவன்

சிரியாவைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் துப்பாக்கிச் சூடு நடக்கும் இடத்தின் மத்தியில் தைரியமாக புகுந்து ஓடிய போது திடீரென ஒரு குண்டு அவனது தோள்பட்டையில் பாய்ந்ததால் கீழே விழும் அந்த சிறுவன் இறந்துவிட்டான் என்று அனைவரும் நினைக்கும் வேளையில் சில நிமிடங்களில் அவன் மீண்டும் எழுந்து துப்பாக்கிச்சூட்டுற்கு இடையே ஓடி அருகே ஒரு வாகனத்தின் பின்னே ஒளிந்துகொண்டிருந்த ஒரு சிறுமியின் கையை பிடித்து இழுத்துக் கொண்டே அருகில் உள்ள கட்டிடம் ஒன்றை நோக்கி ஓடி காப்பாற்றியுள்ளான்.



## தொலைந்த நகரம்

இன்காக்களின் தொலைந்த நகரமான மச்சு பிச்சு லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகளை ஈர்த்து வருகிறது. பெரு நாட்டின் கஸ்கோ என்னும் நகரின் வடமேற்கே 80 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது "மச்சு பிச்சு". கடல் மட்டத்தில் இருந்து சுமார் 2400 மீ. உயரத்தில் அமைந்திருக்கும் இந்த நகரம்,



இன்கா பேரரசு காலத்தை சேர்ந்த வரலாற்று சிறப்புமிக்க பழைய நகரமாகும். பல நூற்றாண்டுகளாக மறக்கப்பட்டிருந்த இந்த நகரம், 1911ம் ஆண்டில் அமெரிக்க வரலாற்றியலாளர் ஹிராம் பிங்கம் என்பவரால் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து சுற்றுலாவாசிகளின் முக்கிய இடமாக மாறியுள்ளது.

இங்கு "இன்டிகுவாட்டானா" என்ற அமைப்பு வானியல் மணிக்கூடாக அதாவது, சூரிய கடிகாரமாக கருதப்படுகிறது.

## எபோலாவின் ரசிகை

இங்கிலாந்தைச் சேர்ந்த தொலைக்காட்சி நடிகை ஏமி சைல்ட்ஸ் எபோலா வைரஸை இசைக்குழு என்று நினைத்து பேசியுள்ளது பலரையும் வியக்க வைத்துள்ளது. லண்டனில் நடந்த விருது விழா ஒன்றில் கலந்து கொண்ட நடிகை ஏமி சைல்ட்ஸ் செய்தியாளர் ஒருவர், மேற்கு ஆப்பிரிக்காவில் ஆயிரக்கணக்கானோர் பலியாக காரணமான எபோலா வைரஸ் பரவுவதை தடுக்க நாம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளோமா என்று கேட்டதற்கு, எபோலா என்றால் வளர்ந்து வரும் இசைக்குழு என்று நினைத்துக் கொண்டதோடு, இன்றில் இருந்து நான் அந்த குழுவின் பெரிய ரசிகை என்றும், அது அருமை என்று நினைக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

## 45 நிமிட போராட்டத்தின் பின் தப்பிய தாய்

அமெரிக்காவின் புளோரிடாவில் நிறைமாத கர்ப்பிணி பெண் ரூபி கிராயுபெரா காசிமிரோ. பிரசவத்திற்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ரூபிக்கு, எதிர்பாராத விதமாக பனிக்குடம் உடைந்ததால், அதிலிருந்த நீர் ரூபியின் ரத்தத்தில் கலந்துவிட்டது. எனவே உடல்நிலை மிகவும் மோசமாகி போனது.



நாடித்துடிப்பும் குறையத் தொடங்கியதால் ரூ ப இறந்து விட்டதாக மருத்துவர்கள் அறிவித்து பெண் குழந்தையை மருத்துவர்கள் பத்திரமாக வெளியே எடுத்தனர். இந்நிலையில் சுமார் 45 நிமிடங்களுக்கு பிறகு, ரூபியின் உடலில் சிறு அசைவுகள் தென்படவே, மீண்டும் சிகிச்சை அளித்து உயிர் பிழைக்க வைத்துள்ளனர்.

## பொருட்செலவு - காதல் ?!

சீனாவில் கணனித்துறையில் பணியாற்றும் இளைஞர் ஒருவர், இளம்பெண்ணிடம் காதலை சொல்வதற்காக ரூ 50 லட்சம் மதிப்புள்ள 99 ஐபோன், 6 ஸ்மார்ட் போன்களை வைத்து இதயம் போன்று வடிவமைத்து வரிசைப்படுத்தியுள்ளார். பின்னர், தனது நண்பர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் முன்னிலையில் அப்பெண்ணை வரவழைத்து மலர் கொத்துக்கள் கொடுத்து அப்பெண்ணிடம் தனது காதலையும், திருமணம் செய்ய விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால் அப்பெண் இவரின் காதலை ஏற்க மறுத்து விட்டார், இதனால் அந்த வாலிபர் ஏமாற்றத்தோடு திரும்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசித்த புலி - நன்றி - தமிழ்கூடல் -



கடந்தவாரத் தொடர்ச்சி

"மீனாட்சி நம்ம கான்ட்ராக்டர்தான். வேலை ரெடி ஆயிடுச்சாம். நம்பளை உடனே நாளைக்கே புறப்பட்டு வரச் சொல்லிட்டார்."

"நம்ம ஊரு பால விநாயகன் கருணையில்தான் இதெல்லாம் நடக்குது. காசு வந்ததும் தேங்காய் உடைக்கணும்"

பாட்டி பேச்சைக் கேட்டு ஒழுங்கா நடந்துக்கணும் என மகனுக்கும், மகனைக் கவனமாகப் பார்த்துக்கணும் எனத் தாயிடமும் மீனாட்சி அறிவுறுத்தினாள். பிரியும் நேரம் நெருங்க நெருங்க பாசம் கூடித்தான் போகிறது. செல்ல மகனுக்கு முத்தம் கொடுத்தாள். பெற்றுக் கொண்டாள்.

தம்பதி சகிதமாக மூட்டை முடிச்சுக்களோடு இரவு கடைசி பஸ் பிடித்து, காலையில் முதலாளி முன் நின்றார்கள்.

ரோடு போட இயந்திரங்கள். உபகரணங்களுக்குப் பதிலாக பெரிய பெரிய சக்கரங்களில் மின்சார கேபிள்களும், மண் வெட்டி கடப்பாரையுமாக அந்த இடம் வேறு வேலைக்கான ஆயத்தத்தில் இயங்கிக் கொண்டிருந்ததை ஏழுமலை உணர்ந்தான். அவனுக்குப் பிடித்துப் போன தார் வாசனை எங்கே? பழைய ஆட்களை விட புதிய ஆட்களும் நிறையப் பேர் இருந்தார்கள்.

"என்ன ஏழுமலை அப்படி பாக்கறே... இந்த முறை ரோடுபோடுற டெண்டர் கிடைக்கல. விடுவேனா? ரோட்டுல கேபிள் பதிக்கிற டெண்டர் வாங்கிட்டேன். சந்தோஷமா, நாம ரோடு போட்டோம் இல்ல. அதே ரோட்டுல ஆங்காங்கே வெட்டி கேபிள் பதிக்கணும்" என கான்ட்ராக்டர் யதுகுலராவ் சிரித்தார்.

ஏழுமலை அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தான். "என்னங்கய்யா சொல்றீங்க?"

"ஆமாம் ஏழுமலை. அதுவும் ஒரு வேலைதானே சீக்கிரம் சாப்பிட்டு கிளம்பு. பூஜை போட்டு ஆரம்பிச்சிடுவோம்", "நாம அழகழகா போட்ட ரோட்டை நாமளே வெட்டி கேபிள் பதிக்கணுமா ஐயோ என்னால முடியாதுங்க, முடியாது" பதறிப் போய் துவண்டவனாய் அதே இடத்தில் உட்கார்ந்த ஏழுமலை சிறுபிள்ளை மாதிரி, கேவி கேவி அழவும் ஆரம்பித்துவிட்டது யதுகுலராவை திகைக்க வைத்தது.

"முதலாளி, பச்சப்புள்ள முகம் மாதிரி அந்த ரோடுதாங்க என் மனசுல பதிஞ்சிருக்கு. அதைப் பாலம் பாலமா வெட்ட என்னால முடியாதுங்க. பலநாள் கண்முழிச்சு வியர்வை சிந்த நாம் வேலை பார்த்தோம். அந்த உழைப்பை நாமளே மதிக்கலைன்னா வேறு யார் மதிப்பாங்க?"

ஏழுமலை அழ மறந்து அவனையறியாமல் புலம்பவும் செய்தான்.

"மெத்த படிச்சவங்களும், மெத்தனமா நடந்துக்கறாங்க. நடவு நட்டதுக்கு அப்புறம் யாராவது உழுவாங்களா.. மொதல்ல கேபிள் பதிச்சிக்கிட்டு... பிறகு இல்ல ரோடு டெண்டர் அறிவிக்கணும்? குரங்கு கையில கிடைச்ச பூமாலை மாதிரி குதறிப் போடுற வேலை பாக்குறதுக்குப் பதில் பட்டினி கெடந்து சாகலாம். எனக்கு உங்க வேலையும் வேணாம். பொல்லாத கூலியும் வேணாம். எங்களை விட்டுருங்க. ஊருக்குப் போயிடறோம்."

மூட்டை முடிச்சுகளுடன் தெருவில் இறங்கி நடக்கும் ஏழுமலையும் அவன் மனைவியையும் மேலும் திகைத்துப் போய் பார்த்து நின்றார், கான்ட்ராக்டர் யதுகுலராவ்.

மேலிட சிபாரிசு பிடித்து, இந்தக் கேபிள் பதிக்கிற வேலையை வாங்கியிருந்தார். பணம் கிடைக்கிறது என்பதற்காக எந்த வேலை வேண்டுமானாலும் செய்யலாமா? ஏழுமலை கொடுத்த ஷாக் ட்ரீட்மென்ட் யதுகுலராவைப் பலமாக யோசிக்க வைத்தது. ரோடு போடுவது என்பது ஆக்கல். போட்ட ரோட்டில் பள்ளம் தோண்டுவது என்பது அழித்தல். ரோட்டை உருவாக்கியவனே அதை அழிக்கலாமா?

ஒரு கூலிக்காரனிடம் இருக்கும் நியாய உணர்வு தனக்கில்லாமல் போச்சே.. யதுகுலராவ் தூரத்தில் போய்க் கொண்டிருந்த ஏழுமலையையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

முற்றும் ...

# வாழ்வியல் -27 எமது முன்னேற்றமும் பொருத்தமான துறையும்

(வி.என்.சந்திரகாந்தி)



ஒரு சினிமா படத்தில் 'பொலீஸ்' அதிகாரி ஒருவர் சந்தானத்தை பொலீஸ் நிலையத்திற்கு இழுத்து வந்து இரண்டு தட்டும் தட்டி 'நீ எப்போ பிறந்தாய்?' என்று கேட்கிறார். அதற்கு சந்தானம் இறுத்த பதில் 'நான் சின்ன குழந்தையாக இருந்தபோது!' என்பதாக இருந்தது. இது வெறும் சிரிப்புக்காக கூறப்பட்டிருந்தாலும் இங்கு ஒரு உண்மை வெளிப்படுகின்றது.

நாம் எமது வாழ்கையில் விடும் தவறுகளுக்கெல்லாம் காரணம், முதிர்ச்சியடையாத ஒரு பராயத்தில், எந்த புரிதலோ விளக்கமோ எதிர்பார்ப்போ இன்றி வாழ்க்கை கடலில் பயணத்தை ஆரம்பிப்பதுதான்! அதுவே பின்னர் பழக்கப்பட்டு விடுகிறது. நிரந்தரமாகியும் விடுகிறது. ஏதோ எமக்கு நேர்கின்ற சம்பவங்களுக்கு ஈடுகொடுத்து வாழ்கையை ஓட்டுவதில் திருப்தி அடைகின்றோம். இந்த நிலைகட்டாயமாக மாற வேண்டும். அதற்கு வாழ்கையை முன்னேற்ற பாதையில் அமைத்துக்கொள்ள அவசியமான பிரதான குணாம்சங்கள் பற்றி முதலில் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எமது வாழ்வின் உயிர்ப்புக்கு காரணமாக இருப்பதே 'அன்பு' தான். அன்புதான் எம்மை மற்றவர்களோடு பிணைத்து வெற்றிக்கு வழிவகுக்கிறது. அறத்தை கடைப்பிடித்தால் அது சிறப்பீனும் செல்வமும் ஈனும் என்று வள்ளுவரும் கூறியுள்ளார். 'நன்றி' எவராலும் கடைப்பிடிக்கப்படவேண்டிய உயரிய குணம். அதே போன்று 'நடுவு நிலைமை' உள்ளவனை உலகம் உயர்வாக மதிக்கும். Integrity என்று ஆங்கிலத்தில் குறிப்பிடுவார்கள் நேர்மை, மேன்மை, பொறுப்புக் கூறும் தன்மை ஆகியவற்றை அது குறிக்கும். சொன்ன வார்த்தையை அவன் காப்பாற்றுவான் என மற்றவர்களால் கணிக்கப்படவேண்டும். 'அமரருள் உய்விப்பது அடக்கம்', 'விழுப்பம் தருவது ஒழுக்கம்.' 'ஈகை' போன்ற தர்மம் எதுவுமில்லை. வாய்மை ஒருவனின் உளத்தூய்மையை விளம்பும் இவை யாவும் ஒரு மனிதனுக்கு அவசியமான மனோநிலை ஆகும். இந்த மனோ நிலை இருக்கும் பட்சத்தில்தான் மற்றவர்கள் உங்களுடன் மீண்டும் மீண்டும் பேசவும் பழகவும் முன்வருவார்கள். இனி எமது முன்னேற்றத்திற்கு மிக மிக அவசியமான மற்றுமொரு பிரதான அம்சம் பற்றி பார்ப்போம். 'அறிவுடை நிலை' அல்லது விஷயம் தெரிந்த நிலை, நாம் ஒரு காரியத்தில் இறங்குவதாயினும், ஒரு நாட்டுக்கு புறப்படுவதாயினும், விண்வெளி பயணத்தினை மேற்கொள்வதாயினும் சரி, அவ்வத்துறைகள் பற்றிய தெளிவு இருந்தால் எமது பய உணர்ச்சி பறந்துவிடும்.

முன்னேறும் குணங்களை வாழ்கையாக்கியதால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் பல ஆண்டுகாலமாக அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரிசையில் நிற்கின்றன. எம்மிடம் அந்த குணங்கள் இல்லாததால்தான் நாம் இன்னமும் பின்தங்கிய நாடுகளின் வரிசையில் நிற்கின்றோம். பாதை போடுவதை பெரும் அபிவிருத்தியாக கருதுகின்றோம். உலகில் உள்ள பாலங்களில் மிக பெரிய பாலங்கள் என்று பார்த்தால் அரைவாசிக்கு மேல் சீனாவில்தான் இருக்கின்றது. ஜப்பான் போன்ற பெரும் அபிவிருத்தி அடைந்த நாடுகளை விடுங்கள் . இரண்டாம் உலக போருக்கு பின் அபிவிருத்தியடைந்த தென்கொரியாவின் சாதனை எப்பேற்பட்டது.!

முதலில் எமது பயத்தையும் தயக்கத்தையும் நீக்க நாம் முயற்சிக்க வேண்டும். எந்தெந்த துறைகளில் எம்மால் பிரகாசிக்க முடியும், சாதிக்க முடியும் என்பதை நாம் ஒவ்வொருவரும் அடையாளம் காணவேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர்கள் எமது தவறுகளை கண்டுபிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார்கள். ஒரு மாணவன் எந்த துறையில் அதிகம் பிரகாசிப்பான் என்பதை முடிவு செய்யவேண்டியவர்கள் அவர்களே! பரீட்சைகளை எதற்காக நடாத்துகின்றார்கள் என்ற அடிப்படையையே மறந்துவிட்டார்கள்.

ஒருவன் மரவேலையில் திறமை காட்டுகிறானா? அவனை மருத்துவ துறைக்கு அனுப்பு! ஒருவன் கணிதத்தில் திறமை காட்டுகிறானா? அவனை கலைத்துறைக்கு அனுப்பு! ஒருவன் விஞ்ஞானத்தில் சாதிக்கின்றானா? அவனுக்கு ஓவியத்தில் பயிற்சி கொடு! இப்படித்தான் நாம் அன்று தொடக்கம் இன்று வரை அழிந்து கொண்டிருக்கின்றோம்! திருட்டுத்தொழிலில் வல்லவன் அரசியலில் இருக்கிறான். சோம்பேறி அரச தொழிலில் இருக்கிறான். ஏமாற்றுக்காரன் வைர வியாபாரியாக இருக்கின்றான்.

நாம் யாரை நம்பி இருந்தும் பிரயோஜனம் இல்லை. நாம் பிராகாசிக்கக் கூடிய துறையை நாமே தெரிவுசெய்ய வேண்டும். அதனை சுயநலமின்றி சமூக நலனுக்காக நாட்டின் நன்மைக்காக முயன்று செய்வோமானால் எமது முயற்சிக்கான ஆதரவு எமக்கு தொடர்ந்து கிட்டும். அந்த உலகமே எம்மை உயர்வு நோக்கி தள்ளும்.

ஒவ்வொரு மனிதனும் தான் சமுதாயத்தின் பிரதானமான அம்சம் என்று ஏனையோரால் கணிக்கப்படுவதை விரும்புகின்றான். அவனது திறமைகள் மற்றவர்களால் பாராட்டுக்குள்ளாக்கப்படும் போது அவன் தனது முயற்சிகளில் முழுமூச்சுடன் இறங்கி இந்த சமூகத்துக்காகவும் நாட்டுக்காகவும் உழைப்பான். அன்றுதான் எமது வாழ்வில் வெற்றி கிட்டும்!

# கண் விற்று சித்திரம்

"அஞ்சலை, சீக்கிரமா வேலைய முடிச்சுட்டு கிளம்பு தாயி"- பக்கத்து வீட்டு பார்வதி அக்கா குரல் கொடுத்தாள்.

"எதுக்கு அக்கா?"

"என்ன ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கற? நம்ம நகராட்சிப் பள்ளிக் கூடத்துல வச்சு நமக்கெல்லாம் இலவச கலர் டிவி தர்றாங்களாம். அதுக்காக மைக்கெலாம் கட்டி காலைல இருந்து பாட்டு போட்டுக்கிட்டு இருக்காங்களே.. நம்ம எம்.எல்.ஏ. வந்து தர்றாரு"

"அடப் போக்கா. எனக்கு டி.வி.யும் வேணாம். ஒண்ணும் வேணாம். இந்த ஓட்டை வீட்டுக்குள்ள எங்கன கொண்டாந்து வைக்கறது. பொழப்பக் கெடுத்துட்டு அங்கன போயி காத்துக் கிடக்கச் சொல்லுதியா?" இரவில் தண்ணி போட்டுட்டு வந்து புருஷன் முருகேசன் செய்த ராவடியின் தாக்கத்தில் இருந்து விடுபடாமல் சலித்துக் கொண்டாள் அஞ்சலை.

"அடப் போக்கத்தவளே, ஒவ்வொரு கூப்பனுக்கும் ஒரு டி.வி.பொட்டின்னு சொல்லிட்டதால, பணக்காரங்க, ஆபிசர் மாருங்க கூட ஆளுக்கு ஒரு டி.வி. வாங்கியிருக்காங்க. ஓசியில கொடுக்குற டி.வி.யை வாங்க உனக்குக் கசக்குதாக்கும். இவ்வளவு ஏன்? நீ வேலை பாக்குற வீட்டு எசமானியம்மாக்கள் கூட இதுக்குள்ள அங்கன போயி காத்துக்கிட்டு இருப்பாங்க. டி.வி. வாங்கப் போயிருந்தேன். அதனால வீட்டு வேலைக்கு வர முடியலைன்னு சொன்னா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க. கூப்பனை எடுத்துக்கிட்டுக் கிளம்பு ஆத்தா" பார்வதி அக்காவின் அனத்தல் தாங்கமுடியாமல் கிளம்பினாள் அஞ்சலை.

அவளுக்குத் தினப்பாடே பெரும்பாடு. இவ்வளவுக்கும் அவள் பிறந்த வீடு சோத்துக்கும், துணிக்கும் குறைவில்லாதபடி ஓரளவு வசதி கொண்டதுதான். "பிளம்பர் வேலை பார்க்கிறான். வருமானத்துக்குக் குறைவில்லை" என்று கேள்விப்பட்டுத்தான் முருகேசனுக்குக் கட்டிக் கொடுத்தார்கள்.



வந்தபிறகுதான் தெரிந்தது, அவனுக்குக் குடிப் பழக்கம் உண்டு என்று. ஆரம்பத்தில் வாரம் ஒருமுறை, இருமுறையாய் இருந்த பழக்கம், இப்போது வேலை முடிந்ததும் மதுக் கடைதான் என்றாகிவிட்டது.

அவளும் சாம, தான, பேதம் என அனைத்தையும் உபயோகித்துப் பார்த்துவிட்டாள். பலனில்லை. கோபத்தில் அவன் அடிக்கும் அடிகளும், ஒண்ணாப்புப் போகும் கண்ணனும்தான் முருகேசனுக்கு வாக்கப்பட்டு அவள் அடைந்த பரிசுகள்.

அடிப்படையில் முருகேசன் என்னவோ நல்லவன்தான். எத்தனையோ முறை அவள் மீதும், பிள்ளை மீதும், "இனிக் குடிக்கவே மாட்டேன்" எனச் சத்தியம் செய்திருக்கிறான். ஆனால் மதுக் கடையைக் கண்டதும் மனம் மாறி சத்தியத்தை மறந்துவிடுகிறான்.

அஞ்சலை அவனுடைய வருமானத்தை நம்பாமல் நாலைந்து வீடுகளில் வீட்டு வேலை பார்த்து ஒரு வழியாய்க் குடும்பத்தை நடத்தி வருகிறாள்.

நேத்து ராத்திரி தண்ணியப் போட்டுட்டு வந்து, "வெறும் புளிக்குழம்புதானா? கருவாட்டுக் குழம்பு எங்கேடி?" என ஒரே ரகளை. "ஆமா, ராசா கட்டுக் கட்டா கொண்டு வந்து கொட்டுறார் இல்லே. கண்டிப்பாக் கருவாட்டுக் குழம்பும், கோழிக் கறியும் ஆக்கித்தான் போடணும்" என அஞ்சலை பதில் கொடுக்க, "எதுத்தாடி பேசுற?" என அவன் தலைமுடியைப் பிடித்துச் சுவரில் மோத அதைப் பார்த்து குழந்தை கண்ணன் அலற, அவளுக்கு அடிவாங்குவதை விட, "அதைப் பார்த்துக் குழந்தை பயந்துவிடக் கூடாதே" என்ற பயம்தான் அதிகமாக இருக்கும்.

"டாக்டரிடம் காட்டித் தண்ணியடிக்கும் பழக்கத்தை மறக்கடிக்கலாம்" என்றாள், மறக்க வேண்டும் என்ற நினைப்பு முருகேசனுக்கு வர வேண்டுமே? வீதிக்கு வீதி திறந்திருக்கும் மதுக் கடைகள் மறக்க விட்டுவிடுமா என்ன?

ஒருவாறு கூட்டம் நடக்கும் பள்ளிக் கூடத்திற்குப் பார்வதியக்கா வுடன் அஞ்சலை வந்துவிட்டாள். ஏற்கனவே அங்கே நிறையப் பேர் வந்து காத்திருந்தனர். அவள் வேலை பார்க்கும் வீடுகளின் எசமானியம்மாக்களையும் பார்க்க முடிந்தது. அவர்கள் வீட்டில் எல்லாம் ஏற்கனவே ஹோம் தியேட்டர் டி.வி.க்களே உண்டு. அப்புறம் ஏன் பராரிகள் போல் இப்படி வந்து காத்துக் கிடக்கிறார்கள்? எது எதற்கோ கௌரவம் பார்ப்பவர்கள் ஏனிப்படிக் காத்துக் கிடக்கிறார்கள்?

மைக் செட்டில் ஆளும் கட்சியின் சாதனைகள் பாடல்களாக ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தன. இந்த இலவசக் கலர் டி.வி. திட்டமும் அதில் ஒன்று. "மது விற்பனையை ஏன் ஒரு சாதனையாகச் சொல்லிக் கொள்வதில்லை. அதில் தானே அதிக வருமானம் வருகிறது?" என அஞ்சலைக்குச் சந்தேகம் வந்தது. "மது விற்பனை வருமானத்தில்தான் அரசாங்கமும், இதுபோன்ற இலவசத் திட்டங்களும் நடக்கின்றன" என்று அவள் வேலை பார்க்கும் வீடுகளில் பேப்பர் படிக்கும் பெரிய மனிதர்கள் பேசிக் கொள்வதைக் கேட்டிருக்கிறாள்.

மேடையில் திடீரென பரபரப்பு. "எம்.எல்.ஏ. வந்து கொண்டிருக்கிறார். அனைவரும் அவர்களுக்கு வழங்கப்பட்ட டோக்கன்படி வரிசையாக உட்காருங்கள்" என ஒருவர் அறிவித்தார். எம்.எல்.ஏ. வந்துவிட அரசு அதிகாரிகளும், உள்ளூர் அரசியல்வாதிகளும் வரவேற்று அழைத்துச் சென்று அமர வைத்து அமர்ந்தனர்.

முதலில் சிலர் பேசிய பின் எம்.எல்.ஏ. மைக்கைப் பிடித்தார். சுமார் ஓர் அரைமணி நேரம் பேசினார். காத்திருந்தவர்களுக்கு வெயில் தகித்தது.

பேசி முடித்ததும் கூட்டம் படபடவென கைதட்டியது. உடன் டி.வி. வழங்கும் வைபவம் துவங்கியது. எம்.எல்.ஏ. தனது சொந்தப் பணத்தில் டி.வி.வாங்கிக் கொடுத்ததைப் போல் புன்னகையோடு போஸ் கொடுத்தார்.

அஞ்சலையின் முறை வந்தது. மேடையேறி எம்.எல்.ஏ.வைக் கும்பிட்டாள். "வாங்கிக்கம்மா" என்ற எம்.எல்.ஏ.விடம், "ஐயா, எங்களை மாதிரி ஏழை பாழைங்களுக்கு இலவச டி.வி.தேவை இல்லை. எங்க குடும்பங்களைச் சீரழிச்சு சின்னாபின்னம் ஆக்கற மதுக் கடைகளை அரசாங்கம் மூடினாலே போதும். நாங்க இத விடவும் பெரிய சைஸ் டி.வி.யை பணம் கொடுத்தே வாங்க முடியும். இந்த மாதிரி இலவசத் திட்டங்களை எல்லாம் மது வருமானத்தில்தான் கொடுக்கறீங்கன்னு எல்லாரும் பேசிக்கிறாங்க. பள்ளிக்கூடத்தில படிச்ச "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டிச் சிரியாரோ?" என்ற பாரதியோட பாட்டுத்தான் நினைவுக்கு வருது. எங்களுக்குத் தேவை இலவச டி.வி. இல்லை. நிம்மதியான வாழ்க்கை. இப்ப நான் இந்த டி.வி.யை வாங்கிக்கிட்டேன்னா, அரசாங்கம் மதுக்கடை வருமானத்துல இலவச டி.வி. கொடுக்கறதைச் சரின்னு ஒத்துக்கிட்டதா ஆயிடும். அதனால எனக்கு இந்த இலவச டி.வி. வேண்டாம். மூச்சுவிடாமல் பேசிவிட்டு விடுவிடுவென்று நடக்கத் துவங்கினாள் அஞ்சலை.

- கீதா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைப்பிடா வரிகள்

இருள் மெல்லச்
சூழும் - ஒரு மாலை....

மழை நாள்...

பார்வை வெளியில்
பேருயரத்திற் தெரியும்
இயேசுவின்
சிலுவை...

உங்களை அறைந்த
உதிரமதில்
இல்லை...

ஆண்டவரே ...

உங்களை அறைந்த
உதிரமதில்
இல்லை...

சிலுவைகள் மட்டுமே
எஞ்சிக் கிடந்த
எம்மண்ணில்

உயிருடன் நீங்களும்
அறைந்த
உதிரமும் - இல்லா
அனாதைச் சிலுவைகளில்
அன்று
சீருடை தரித்த
மானிடப் பதர்கள்
விதியின்
பெயர் சொல்லி
எம் - வாழ்வை
அறைந்தனர்..

சிலுவைகள்
உயிர் பெற்றுப்
பின் தடுமாறிச்
செத்தன.

ஆண்டவரே...

எம் பாவத்தின்
பெயரால் ...

விதியின் பெயரால்

போர்க் குணம் கொண்ட
போக்கின் பெயரால்

ஒவ்வோருயிரையும்
அறைந்த பொழுதில்

சிலுவைகள் உயிர்த்தன
பின் - உடனேயே
இறந்தன...

ஆண்டவரே
தோத்திரம்...

எமது பாவங்களின்
பெயரால்

அறைந்து
இறந்து
மூன்றாம் நாளில்
உயிர்த்தீரே...

தோத்திரம்...
யேசுவே
தோத்திரம்

எம் வேண்டுகை
எல்லாம்

எம் பாவம் நீக்கத்
தோள்களிற்
போர் சுமந்து..

புண்பட்டு – பின்
சிலுவையிலறைந்து
இறந்த குழந்தைகளின்
உயிர்ப்பு
எப்போ?
என்பதே....

– – மாயன் – –




# நாட்குறிப்பு ஒரு பொக்கிஷம்

அன்புள்ளங்கள்தான்
என்
ஆயுட்கால நாட் குறிப்பேட்டின்
அழகான வெள்ளைப் பக்கங்கள்.
என்னையே நான் மீட்டிக்கொள்வதில்
என்னதான் இன்பம்?
நானும் ஒரு நாட்குறிப்பேடாகி
அவளை, அவனை, அவர்களை
எழுதி - என்றாவது
அவளின், அவனின், அவர்களின்
பக்கங்களைப் புரட்டிப் பார்க்கையில்
எத்தனை நிறைவு?
நின்மதி?
நிதரிசனம்?
வினாக்கள்?
விடைகள்?
உயர்ந்த உண்மைகள்?
அதில் காணாத கனவில்லை,
தேடாத உறவில்லை,
புரியாத உணர்வில்லை,
தெரியாத முகமில்லை,
சொல்லிப் புரியாது சுகம்.
நீயும் ஒரு நாட்குறிப்பேடாகு.
நல்ல பக்கங்களைத் திற.
நாலுபேரையும் எழுது.
அதில்.....
எனக்காகவும் ஓர் இடம் வை,
என்னையே எழுது,
மூடு,
எப்போதாவது திறந்து புரட்டிப்பார்,
அப்போது என்னை அறிவாய்.

– மதுரன் –
[கட்டைப்பறிச்சான்]

# செல்லும் பாதையை புரிந்து செல்

நிலையில்லா வாழ்வை
நிலையென்றெண்ணி
அலைந்து திரியும்
ஆறறிவு மானிடா
உலகம், எதுவென
உணர்ந்து கொண்டாயா?
உடலும், உயிரும்
உறவு கொண்டதை
அறிந்துகொண்டாயா
அறிந்து வாழ்ந்தால்
துன்பமே மறப்பாய்
இன்பமாய் மாறும்
இவ்வுலக வாழ்வு
நீரில் மிதக்கும்
ஓடம் போலானது
உலகில் வாழும்
மானிட வாழ்வு
பரந்த கடலில்
பயணம் செய்கின்றாய்
கடலில் செல்லு
கடலினுள் செல்லாதே
தாமரையில்லயில்
தண்ணீராய் வாழு
ஓடுபவன் நீ
ஓட்டுபவன் இறைவன்
முயற்சி உன்னுடையது
முடிவோ அவனுடையது

நீண்ட பயணம்
என்றோ ஓர் நாள்
கரைசேர்வதுறுதி
பாதையை அறிந்து செல்
கீதையும், வேதமும்
சொன்னது பாதையே
போதனையெல்லாம்
சாதனைக்காகவே
புரிவதுன் திறமையே
புரிந்தபின் அறிவாய்
தெரிந்து கொள்பாதையை
சிறப்புறும் பயணம்


நூல் : பொன்னாவரை – சேனையூர் இரத்தினா

# திருமதி எனும் வெகுமதி

துணை எனும் துறையோடு வாழும்
வீட்டின் துணையகம்
வாழ்வில் இணைந்த - எம்
வீட்டின் விருட்சகம்
ஈருயிருடன் ஓர் உடலான
வீட்டின் இணையகம்

தினம் சேரும் செல்வ
வீட்டின் பொருளகம்
நம் முன்னோர் கட்டிக்காத்த
வீட்டின் பெட்டகம்

குலம் தளைக்க வந்த
வீட்டின் முளையகம்
அன்பு நிலைக்க உழைக்கும்
வீட்டின் நடுநிலையகம்

மறந்தேனும் விலை போகாத
வீட்டின் கற்பகம்
இவளே என்றும் தவழ்ந்த
வீட்டின் ஒளியகம்

அவளே காக்கும் புகுந்த
வீட்டின் விழியகம்
மொத்தத்தில் மனைவி எனும் தாய்மையே
வீட்டிகன் மருந்தகம்

– மலைநேயன் –

# 'குறோட்ட' னடா!

பயிர் விளைத்தவராம் - அப்பனார்
பக்குவம் பார்த்தவராம்!
பயிர் நடுவினிலே - கிடந்தே
பழக்கப்பட்டவன் நான்!
உயிர் - உணவாகப் - பயிரை
உயர்ந்திருந்ததினால்,
நயந்தரும் பயிரை - வளர்க்க
நானும் முயன்றேனே!

சின்னஞ்சிறுகாணி - நாற்புறம்
'சீமெந்து'ச்சுற்றுமதில்!
முன்னும் பின்னும் வீடு - நடந்தால்
முட்டுப்படும் உடம்பு!
என்ன பயிர் நடலாம்? - அதனால்
ஏது பயன் பெறலாம்?
தின்னும் தயிர்ச்சட்டி - மதில்மேல்
தெரியும் 'குறோட்ட'னடா!

– தாமரைத்தீவான் –
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி



திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

**பொருண்மைச் சிறப்பு**

சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவம் "தமிழனுக்குரியது" என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு", எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் "எல்லாப் பொருளும் இதன் பால் உள" என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட்ச் சிறப்பை உணர்த்துவன.

**வாழ்வியல் பதிவு**

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது.இதனை சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப் பட்டுள்ளது. வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன.

மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் - வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் என்னும் முத்தமிழ் அறிஞரின் கருத்தும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப் படுத்துகிறது.

**முதன்மைப் பயன்**

உயிரினத்தின் உச்சியில் வாழும் இன்றைய மனிதனை, அவனது வாழ்க்கையைப் பகுத்து நோக்கி, அறம், பொருள், இன்பம் ஆகிய முதன்மைப் பயனை அறிய வைத்துப் பயனுடைய வாழ்க்கை வாழ வள்ளுவம் வழி காட்டுகிறது. எதிலும் விரைவும், ஓட்டமும் காட்டும் இந்த நூற்றாண்டு மனிதனுக்கு உள்ளத்தை உறுதிப்படுத்தவும் வாழ்வியல் பொருண்மைத் தெளிவுபெறவும் வள்ளுவர் வாக்கு ஊன்றுகோலாய் இருக்கிறது

**பன்முகப்பார்வை**

தனி மனிதநிலை, குடும்ப நிலை, உறவினர் நிலை, சமூக உறுப்பினர் நிலை, மக்கள் நிலை என்னும் தளங்களில் மனிதர்கள் பாதுகாக்க வேண்டிய பண்புகள், ஆற்ற வேண்டிய பணிகள், எனப் பன்முகக் கூறுகளை ஒழுங்குற அமைத்து ஒரு முழுமையான வாழ்வியல் கருத்தாக்கத்தை வள்ளுவம் தந்துள்ளது.

தமிழ்ச் சமுதாயத்தில் காலங்காலமாய் இருந்து வந்த மரபுத்தளைகளை உடைத்து, மனிதப் பழக்க வழக்கங்களை மாற்றித் தனிமனிதத் தூய்மையை உருவாக்க வள்ளுவர் முயன்றுள்ளார்.

**மரபுகளைத் தகர்த்தல்**

மது அருந்துதலும் புலால் உண்ணுதலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுக்கம் என்னும் நிலையை மாற்றி மனித மனத்தினை, வாழ்வின் பயனைத் தடம்மாற்றும் தவறுகள் என வள்ளுவர் சுட்டிக் காட்டியுள்ளார். இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய மணம் கமழ் தேறல் மடுப்ப நாளும் மகிழ்ந்து இனிது உறைமதி பெரும எனவும் சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே பெரியகட் பெறினே யாம்பாடத் தான் மகிழ்ந்தது உண்ணும் மன்னே என்றும் கள்ளுண்டுகளித்தலையும், கள்ளுண்ணல் பெருமித வாழ்வாக இருந்த மரபுகளையும் பின்பற்றக் கூடிய ஒழுக்கமாய்க் காட்டும் வழக்கினை மாற்றி அதனைச் சமுதாயத் தீமையாக உரைத்தவர் வள்ளுவர்.

தொடரும்.....

முனைவர் நா. தனராசன்
முதுநிலை விரிவுரையாளர் தமிழ்த்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபதியை மிரட்டிய சூர்யா



தமிழ் சினிமாவின் மிகவும் எளிமையான நடிகர் விஜய். இவர் எப்போதும் தனக்கு வரும் இன்னல்களுக்கு அமைதியையே பதிலாக தருவார். இந்நிலையில் இயக்குனர் எஸ்.ஜே.சூர்யா அவர்கள் சமீபத்தில் ஒரு பேட்டியில் 'சூப்பர் ஸ்டார் என்பது ஒருவரே, அவர் இந்த இடத்திற்கு வருவதற்கு மிகவும் சிரமப்பட்டுள்ளார். இதனால், யாரும் அவர் இடத்திற்கு வரவேண்டும் என்று கனவில் கூட நினைக்க வேண்டாம்' என்று கூறியுள்ளார்.

## வாய்திறக்கும் கமல்



கமல் தன் பிறந்தநாள் உரையில் "பாபநாசம்" படம் எதிர்பாராத வேகத்தில் முடிஞ்சிருச்சு. ஆனா, அதுக்கும் முன்னால் முதலில் "உத்தம வில்லன்" தான் திரைக்கு வரும். "உத்தம வில்லன்", ஒரு நடிகனைப் பற்றிய கதை.எங்களுக்குத் தெரிஞ்ச கதை என்றதால் இறங்கி அடித்துள்ளேன், இப்படம் நிச்சயம் உங்களை கவரும்' எனக் கூறியுள்ளார்.

## லிங்காவில் பாடிய ஈழத்து இளைஞன்.



சமீபத்தில் தான் லிங்கா படத்தின் ஆடியோ டிராக் வெளியாகியிருந்தது. இப்படத்தில் வருகிற ஓ நண்பா என்று வரும் அறிமுக பாடலை எஸ்.பி.பி அவர்கள் பாட ஈழத்து கலைஞன் தினேஷ் ஆரியன் அவர்கள் பாடலில் வரும் ராப் போஷன்களை பாடியுள்ளார்.

விரைவில் வெளியாக இருக்கும் லிங்காவின் ஆடியோ வெளியீட்டு விழா வரும் 16ம் தேதி மிகவும் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது.

## தற்போது முன்னணியில் சேதுபதி



சில நாட்களுக்கு முன் விஜய் சேதுபதி ஸ்டுடியோ 9 தயாரிப்பில் வசந்தக்குமாரன் என்ற படத்தில் நடிப்பதாக இருந்தார். பின் தயாரிப்பாளர் சுரேஷ் நடவடிக்கைகள், அவர் பேசிய தகாத வார்த்தைகளால் அந்த படத்தில் இருந்து விலகுகிறேன் என்று கூறினார். மேலும் சுரேஷ் தன்னை ஆள் வைத்து மிரட்டியதால், இதை கண்டித்து நடிகர் சங்க தலைவர் சரத்குமாருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

## பலத்த அடி விழுந்திருக்குமோ!!



மாதவன் தற்போது நடித்துவரும் இறுதிசுற்று திரைப்படம் கடைசி கட்டத்தை எட்டியுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன் இப்படத்தின் பாக்ஸிங் சம்மந்தமான காட்சிகள் எடுக்கப்பட்டு வரும் நிலையில், இதற்காக மாதவன் மிகவும் சிரமப்பட்டு நடித்து வந்தார். அப்போது எதிர்பாராத விதமாக அவருக்கு ஸ்டண்ட் இயக்குனர் அடித்த அடி பலமாக விழுந்தது, இதை தொடர்ந்து சிகிச்சை முடிந்து சில மணி நேரம் கழித்தே ஷூட்டிங் ஆரம்பித்துள்ளது.

## ஹீரோயின் லூசா??



கே. வி ஆனந்தின் இயக்கத்தில், தனுஷ், புதுமுக நடிகை அமைரா நடிக்கும் திரைப்படம் "அனேகன்". அண்மையில் இத்திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. இவ்விழா மேடையில் பேச ஆரம்பித்த இயக்குனர். கே. வி ஆனந் படக்குழுவினர், ஹீரோ என அனைவரையும் புகழ்ந்து தள்ளினர்.

ஆனால் ஹீரோயினைப் பற்றி இவங்க பார்க்க லூசு மாதிரி தான் இருப்பாங்க, ஆனா தெளிவு. என்றவர் ஆஹா ஹீரோயினை லூசு என சொல்லிட்டோமே என புரிய பின்னர் ஒருவாறு சமாளித்து பேசி முடித்துள்ளார்.

## அன்பான மனிதர் – தல



என்னை அறிந்தால் படத்தில் புதிதாக இணைந்திருப்பவர் பார்வதி நாயர். இவர் அருண் விஜய்க்கு ஜோடியாக நடிக்கிறார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர் சமீபத்தில் ஒரு பேட்டியில் 'அஜித்துடன் நடிப்பது எனது பாக்கியம், அவர் அளவிற்கு எளிமையான மனிதரை நான் பார்த்தது இல்லை. படப்பிடிப்பில் எல்லோருடனும் அன்பாக பேசுகிறார்' என புகழ்ந்து தள்ளியுள்ளார்.

## ஜெர்மனி காற்றில் ஜி.வீ

ஜி.வி.பிரகாஷ் இசை அமைப்பாளராக மட்டுமில்லாமல் நடிகராகவும் வலம் வந்து கொண்டிருக்கிறார். இனி இவர் இசையை விட்டு விடுவார், நடிப்பில் மட்டுமே கவனம் செலுத்துவார் என்று பல விமர்சனங்கள் வந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தது போல, சிம்போனி இசைக்கு இசை அமைப்பாளராக ஜெர்மனி செல்ல இருக்கிறார்.

## முத்த மழை



ஷாருக் - தீபிகா நடிப்பில் வெளிவந்த ஓம் சாந்தி ஓம், சென்னை எக்ஸ்பிரஸ், ஹாப்பி நியூ இயர் படங்கள் மாபெரும் வெற்றி பெற்றது. சமீபத்தில் வெளிவந்த ஹாப்பி நியூ இயர் படம் ரூ 200 கோடி வசூல் செய்ததை முன்னிட்டு ஷாருக் ஒரு பார்ட்டி வைத்தார். இதில் பல பிரபலங்கள் கலந்து கொண்டனர். இதில் யாரும் எதிர்பார்க்காத நேரத்தில் தீபிகா, ஷாருக்கானுக்கு முத்தம் கொடுக்க அங்கு இருந்தவர்கள் அனைவரையும் இந்த செயல் சங்கடப்படுத்தியது.

# சினிமுரசு

இயக்குனர் அர்ஜுனின்

## ஜெய்ஹிந்த் 2 திரை விமர்சனம்

### அர்ஜுன், சுர்வீன் சாவ்லா நடிக்கும்



சென்னையில் கராத்தே பள்ளி நடத்தி வருகிறார் நாயகன் அர்ஜுன். அவருக்கும் நாயகி சுர்வீன் சாவ்லாக்கும் காதல் ஏற்படுகிறது. இந்நிலையில் அர்ஜுனனுக்கு தெரிந்த ஒருவர் தன்னுடைய குழந்தையை நல்ல பள்ளியில் படிக்க வைக்க முயற்சி செய்கிறார்.

ஏழ்மை நிலையில் இருந்தாலும் அந்த குழந்தையை பணக்காரர்கள் படிக்கும் பெரிய பள்ளியில் சேர்க்க முயற்சி செய்கிறார். அந்த குழந்தையுடன் அர்ஜுன் மற்றும் சுர்வின் இருவரும் அதிக பாசம் வைத்துள்ளனர். இதனிடையே பள்ளியில் இடம் கிடைத்தும் பணம் இல்லாத காரணத்தால் அந்த ஏழையால் தன் மகனை பள்ளியில் சேர்க்க முடியவில்லை. இதனால் மனம் வெறுத்துப்போன அந்த ஏழை குழந்தையை கொன்று தானும் மனைவியுடன் தற்கொலை செய்து கொள்கிறார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அர்ஜுன், அனைவருக்கும் கல்வி சம அளவில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட முடிவு செய்கிறார். நாட்டில் உள்ள தனியார் பள்ளிகள் அனைத்தும் அரசுமயமாக்க வேண்டும் என குரல் கொடுக்கின்றார். இதற்கு பொதுமக்கள் பெருமளவில் வரவேற்பு கொடுத்த போதிலும் தனியார் பள்ளி நிர்வாகிகள் அர்ஜுன் மீது கடும் ஆத்திரம் அடைகின்றனர். அர்ஜுனை தீர்த்து கட்ட அவர்கள் முடிவு செய்கின்றனர். அவர்களிடம் இருந்து அர்ஜுன் தப்பித்தாரா? அனைவருக்கு சம அளவில் கல்வி கிடைக்க அவர் எடுத்த முயற்சி வெற்றி பெற்றதா? அர்ஜுன் - சுர்வீன் காதல் வெற்றி பெற்றதா என்பதுதான் மீதிக்கதை.



ஜெய்ஹிந்த் வெளியாகி சரியாக 20 வருடம் கழித்து ஜெய்ஹிந்த் 2 படத்தை இயக்கியுள்ளார் அர்ஜுன். 20 வருடங்கள் ஆனபோதிலும் அர்ஜுன் முகத்தில் முதுமை தெரியவில்லை. ஆயுதம் ஏந்தி போராடுவது மட்டுமின்றி நாட்டுக்குள் வாழ்பவர்களுக்கு கிடைக்க கூடிய கல்வி மற்றும் பிற பொது நலன்கள் கிடைக்க போராடுவதும் தேசப்பற்றுதான் என்பதை இப்படத்தின் மூலம் காண்பித்திருக்கிறார். நாயகி சுர்வீனுக்கு அதிக வேலை இல்லை எடுத்துக்கொண்ட கதை நல்ல நோக்கத்தை குறிப்பிட்டாலும் அதை சொல்லும் விதத்தில் புதுமை எதுவும் இல்லை.

மொத்தத்தில் தூள் கிளப்பியுள்ளது.

## சினிமா கிசு கிசு



- கவர்ச்சி பொம்மையாக உடம்பில் தூசி ஒட்டாமல் நடித்து வந்த ஹன்சிகாவுக்கும் இப்போது அழுக்குப் படிந்த வேடங்களில் நடிக்கும் ஆர்வம் தலை தூக்கியுள்ளது. தன்னிடம் கதை கூற வருபவர்களிடம் அழுத்தமான கேரக்டர் இருந்தால் மட்டும் சொல்லுங்கள் என்கிறாராம்.
- திருமணத்திற்குப் பின் தமிழில் நடிக்காத போதும், மலையாளத்தில் ஒத்துக்கொண்ட இரண்டு படங்களில் நடிக்கிறாராம் அமலாபால்
- சமந்தா தமிழில் நடித்த படங்களிலேயே பெரிய வெற்றி பெற்றதில்லை என்ற சென்டிமென்ட் கத்தி மூலம் தகர்க்கப்பட்டதை அடுத்து, படத்தின் வெற்றிக்கும், தோல்விக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. வென்றால் மகிழ்ச்சி, தோற்றால் கவலை இல்லை என்கிறார்.
- கிம் கர்தஷியான் என்றாலே அவரது பின்னழகு தான் முதலில் நினைவுக்கு வரும். இவர் சமீபத்தில் அமெரிக்காவின் முன்னணி இதழுக்கு கொடுத்துள்ள பின்னழகை வெளிக்காட்டிய இரண்டு போஸ்களுமே ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பை எகிறவைத்துள்ளது.
- சன்னிலியோனின் ஸ்டேட்மென்ட் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 'செக்ஸ் என்பது ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்கும் அவசியமானது மனம் கவர்ந்தவர்களுடன் நல்ல உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் அவர்களுடன் உறவை வைத்துக்கொள்ள வேண்டும் என்கிறார் சன்னி.
- நான் நடிகையானதால் எனது கனவான எம்.பி.ஏ பாதியிலே நிறுத்தப்பட்டது. ஆகையால் நான் தொடர்ந்து படிக்க ஆசைப்படுகிறேன் என்கிறார் டாப்சி
- தன்னை வைத்து படம் இயக்கியவர்கள், இயக்காதவர்கள் என அனைவருடனும் தான் ஓய்வாக இருக்கும் வேளையில் நேரடி விசிட் அடித்து நட்பை புதுப்பித்து வரும் அஞ்சலி புதுப் படங்களுக்கான பேச்சுவார்த்தையும் நடத்துகிறார்.
- கமல்ஹாசன் தற்போது 3 படங்களில் பிஸியாக நடித்து வருகிறார். இதில் இரண்டு படங்கள் ரிலீஸ்க்கு தயார் நிலையில் உள்ளது. இதையடுத்து திப்பு சுல்தான் வாழ்க்கையை மையமாக கொண்டு, கமல் ஒரு பிரம்மாண்ட படத்தை தயாரித்து, இயக்கவுள்ளதாக கூறப்படுகிறது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## Mobile

### தங்க கவருடன் ஃபோன்

சம்சுங் நிறுவனம் அண்மையில் Galaxy Alpha எனும் 24 கரட் தங்கத்தினால் ஆன ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்திருந்தது. இதன் விலையானது 1,664.17 பவுண்ட்ஸ்கள் என தெரிவிக்கப் பட்டுள்ளது. 4.7 அங்குல அளவு, 1280 x 820 Pixel Resolution உடைய தொடுதிரையினைக் கொண்டுள்ள இக்கைப்பேசியில் Eight Core Samsung Exynos Processor, பிரதான நினைவகமாக 2GB RAM என்பனவும், 12 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 2.1 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக் களுக்கான கமெரா என்பனவும் தரப்பட்டுள்ளன.

### GALAXY S

கூகுள் நிறுவனம் அண்மையில் தனது புதிய இயங்குதளமான Android Lollipop தொடர்பான அறிவித்தலை வெளியிட்டிருந்தது. இந்நிலையில் 2015ம் ஆண்டின் தொடக்கத்தில் Android Lollipop இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட Samsung Galaxy S4 ஸ்மார்ட் கைப்பேசி முதன் முதலாக அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

## Information Technology

### 56 மில் திருட்டு

ஒன்லைன் வியாபார சேவையினை வழங்கிவரும் Home Depot நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் 56 மில்லியன் பேரின் கிரடிட் கார்ட் தகவல்கள் கடந்த செப்டெம்பர் மாத இறுதியில் திருடப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது 53 மில்லியன் வரையான மின்னஞ்சல் முகவரிகள் ஹேக் செய்யப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.



### 4G 2016 இல்



பிரித்தானியாவில் தொலைபேசி வலையமைப்பு சேவையை வழங்கிவரும் பிரபல நிறுவனமான Ofcom 4G தொழில்நுட்பத்தினால் ஆன வலையமைப்பினை முற்றுமுழுதாக அறிமுகம் செய்யவுள்ளது. அடுத்த வருடத்தில் அல்லது 2016ம் ஆண்டில் அதி உயர் மீடிறன் கொண்ட 4G தொழில்நுட்பம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

### அப்பிள் கணனிகளுக்கும்

விண்டோஸ், அன்ரோயிட் இயங்குதளங்களில் செயற்படும் சாதனங்களில் இணைய உலாவிக்கு பதிலாக பயன்படுத்தக்கூடிய ஜிமெயில் அப்பிளிக்கேஷன்கள் காணப்படுகின்றன. இருந்த போதிலும் அப்பிளின் Mac கணனிகளில் பயன்படுத்தக்கூடிய ஜிமெயில் அப்பிளிக்கேஷன் Zive எனும் நிறுவனத்தால் தற்போதுதான் வெளியிடப்பட்டுள்ளது. இது புரமோஷனுக்காக Kickstarter தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விரைவில் பயனர்களின் பாவனைக்கு விடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கணனியின் வேகத்தை அதிகரிக்க

தொடர்ச்சியாக கணயினை பயன்படுத்தி வரும் போது அதன் வேகம் குறைவடைவதற்கான சாத்தியம் வன்றட்டில் தற்காலிக கோப்புக்கள் சேருதல் மற்றும் கோப்புக்களின் ஒழுங்கமைப்பு சீரின்மை போன்ற காரணங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்வாறு வன்றட்டில் ஒழுங்கின்றி காணப்படும் கோப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்கு Disk Defragment எனும் செய்முறை பயனுள்ளதாக காணப்படுகின்றது. இதற்கான வசதி விண்டோஸ் இயங்குதளத்தில் தரப்பட்டுள்ள போதிலும் Auslogics Disk Defragn எனும் மென்பொருள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. விண்டோஸ் இயங்குதளத்தில் நிறுவி பயன்படுத்தக் கூடியதாகவும், 6MB கோப்பு அளவுடையதுமான இம்மென் பொருளின் உதவியுடன் மிக குறைவான நேரத்தில் வன்றட்டினை Defragment செய்ய முடியும்.

### 33.1 ஆவது புதிய பதிப்பு



Firefox உலாவியின் புதிய பதிப்பினை Mozilla நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்த உலாவியில் இணையத்தேடல்களை பாதுகாப்பானதாக மேற்கொள்ள முடிவதுடன் குக்கீஸ்களை (Cookies) ஒரே ஒரு பட்டனை அழுத்துவதன் மூலம் நீக்குவதற்கு Forget எனும் பொத்தான் தரப்பட்டுள்ளது. இதில் பயனர்களை கண்காணிக்க முடியாது இணையத் தேடல்களை வழங்கும் DuckDuckGo தேடுபொறியினூடாக (Search Engine) இணையத் தேடல்களை மேற்கொள்ளும் வசதியும் தரப்பட்டுள்ளது.

## Other

### ஸ்மார்ட் கைக் கடிகாரம்



LG நிறுவனம் G Watch R எனும் புதிய ஸ்மார்ட் கைக்கடிகாரத்தினை வடிவமைத்துள்ளது. இக்கடிகாரமானது 1.3 அங்குல அளவுடைய P-OLED திரையினைக் கொண்டுள்ளதுடன், 1.2GHz வேகம் கொண்ட Qualcomm Snapdragon Processor, 512MB RAM, 4GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. மேலும் Bluetooth 4.0, Accelerometer, Compass, PPG Heart Rate Monitor, Barometer போன்ற அம்சங்களும் இக்கடிகாரத்தில் காப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அதிரடி அறிமுகம் Audi Q3



Audi இறுதியாக அறிமுகம் செய்திருந்த Audi Q3 இன் புதிய பதிப்பானது முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட காரிலும் புதிய அம்சங்கள் உடன் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வலுவானது முன்னைய காரிலும் 40 குதிரை வலுக்கள் அதிகரிக்கப்பட்டு 340 குதிரை வலுக் கொண்டதாக காணப்படுகின்றது. மேலும் இதில் 2.5 லிட்டர் கொள்ளளவு உடைய 5 சிலிண்டர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன் அதி உச்ச வேகம் மணிக்கு 155 மைல்களாக இருப்பதுடன் 4.8 செக்கன்களில் மணிக்கு 100 கிலோமீற்றர்கள் என்ற வேகத்தை எட்டவல்லதாகக் காணப்படுகின்றது.

### குண்டுகளை கண்டறிய புதிய வழி



நனோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி குண்டுகளை கண்டுபிடிக்கும் சாதனத்தை Utah பல்கலைக்கழக பொறியியலாளர்கள் உருவாக்கியுள்ள இச்சாதனம் Carbon Nanotubes என அழைக்கப்படுகின்றது.

நுணுக்குக்காட்டி, இரண்டு மின் வாய்கள், என்பவற்றினையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ள இச்சாதனமானது குண்டுகளை அடையாளம் கண்டதும் உண்டாகும் மின்னியல் மாற்றத்தினை பயன்படுத்துவோருக்கு அறிவிக்கின்றது.

## ஒரு மனிதன்... அவன் கட்டில்... அவன் மனச்சாட்சி

## சாதாரணமானவனின் மனது

**சஞ்சயன் செல்வமாணிக்கம்**

சில நாட்களாகவே உடலும் உள்ளமும் கனத்துப் போய் இருக்கின்றன. இது ஒன்றும் புதிதில்லை. பகலை விழுங்கிய பனிக்கால நாட்களில் நான் ஆண்டாண்டுகளாய் அனுபவிக்கும் ஒரு உணர்வு இது.

நேற்று, வெளியில் இருளும், குளிரும் தாராளமாய் விளைந்திருந்தன. எனது அறையினுள் சாய்ந்திருந்தவாறே வாசித்துக்கொண்டிருந்தேன். யாரோ மெதுவாய் கனைப்பது போலிருந்தது. நிமிர்ந்து பார்த்தேன். எவருமில்லை. மீண்டும் வாசிப்பில் ஆழ்ந்து போகும் போது அதே கனைப்புச் சத்தம் கேட்டது. அறைக்குள் பாரும் இல்லை, அப்போ கனைப்பது யார்? என்று சிந்தித்த போது மிகவும் பரீட்சயமான குரலொன்று பேசிற்று. அது எனது கட்டிலின் ஆன்மாவின் குரல்.

"உன்னுடன் ஒரு பிரச்சனை பற்றிப் பேச வேண்டும்" என்றது அது.

நமக்கிடையில் பெரிதாய் எந்தவிதமான பூசல்களும் வருவதில்லை. இருவரும் பூசல்களை விரும்புவதுமில்லை. ஒருவரை ஒருவர் அன்பாய் கவனித்துக்கொள்கிறோம். இருவரும் தனித்தவர்கள். நான் தனியே உறங்குபவன். எனக்குத் துணை என் கட்டில். கட்டிலுக்கு துணை நான்.

எனது கட்டிலுக்கு ஆன்மா இருக்கிறது. கட்டில் என்னும் சடப்பொருள் அதன் உடலாக இருக்கிறது. எனவே கட்டில் என்னை தனது ஆன்மாவுடனேயே பேசு என்றிருக்கிறது. அதுவும் ஒரு விதத்தில் ஆறுதலாகவே இருக்கிறது. கட்டிலின் ஆன்மா நான் பிறந்த நாள் தொடக்கம் என்னை பிரியாமல் வந்து கொண்டே இருப்பதால் அது நான் எங்கு தூங்கிப் போனாலும் தனக்கென்றொரு உடலை தற்காலிகமாக பெற்றுக்கொண்டு என்னுடன் சேர்ந்துறங்குகிறது. எனது நெருங்கிய நண்பனாயும் இருக்கிறது.

எங்கள் நட்புக்குள் மூன்றாமவர் ஒருவரும் இருக்கிறார். அது என் மனச்சாட்சி. அதற்கும் கட்டிலின் ஆன்மாவுக்கும் பெரிதாய் சொல்லிக்கொள்ளுமளவுக்கு நட்பில்லை. நான் மட்டும் மனச்சாட்சியுடன் நட்பாயிருக்க முயன்றுகொண்டிருக்கிறேன். ஆனால் மனச்சாட்சியோ எம்மிருவருடனும் நட்பாய் இருக்கவே விரும்புகிறது. கட்டிலின் ஆன்மாவோ, உன் மகிழ்ச்சி எதுவோ அதையோ நானும் விரும்புகிறேன் என்கிறது, என்னிடம். கட்டிலின் ஆன்மாவுக்கு தெரிந்த, மனச்சாட்சிக்கு தவறாகப்படும் விடயங்களும் இருக்கின்றன. எனவே மனச்சாட்சியுடன் மோதாதே என்றுரைத்திருக்கிறேன் கட்டிலின் ஆன்மாவிடம்.

சற்று சிந்தித்த பின் "பின்பொரு நாள் பேசுவோம்" என்று கூறினேன். கட்டிலின் ஆன்மா அமைதியாயிற்று.

அடுத்த நாள்: அன்றைய பின்னிரவு மிகவும் அமைதியாய் இருந்தது. குளிர் கட்டுக்கடங்கியதாய் இருக்க, வானம் மட்டும் புகார்களை பரப்பிக்கொண்டிருந்தது ஊருக்குள் பரப்பிக்கொண்டிருந்தது. எனக்கு கட்டிலின் ஆன்மாவுடன் பேசும் ஆர்வம் இருந்தாலும் ஏனோ ஒரு பயம் மனதினுள் படந்தபடியே இருந்தது. ஒரு கிளாஸ் கொன்யாக் எடுத்துக் கொண்டேன். 5 - 10 நிமிடங்களின் பின் அமரிக்காவின் வான்படையையே எதிர்க்கும் தைரியம் வந்தமர்ந்து கொண்டது, என்னிடம். மெதுவாய் கட்டிலில் சாய்ந்து கொண்டேன்.

க்கும் .. என்று கனைத்துக்கொண்டேன்

" ஏதோ பேச வேண்டும் என்றாயே?, பேசு, என்றேன்" கட்டிலின் ஆன்மாவிடம்.

எது வித பதிலுமில்லை.

எனது மனச்சாட்சி மட்டும் என்னை பார்த்தபடியே உட்கார்ந்திருந்தது, பெரு அமைதியுடன். எனக்கு, அது இவ்வாறு அமைதியாய் இருப்பது பிடிப்பதில்லை. அது என் தோல்வியின் அறிகுறி. எனவே மீண்டும் கட்டிலின் ஆன்மாவை நோக்கி பெருஞ் சத்தமாய் "ஏதோ கதைக்க வேண்டுமென்றாயே அது என்ன என்றேன்"

கட்டிலின் ஆன்மா மனச்சாட்சியினை நிமிர்ந்து பார்க்க அவர்கள் இருவதும் எதோ ரகசியம் பேசுவது போலிருந்தது எனக்கு. கொன்யாக் போதை எனக்குள் எகிறிக்கொண்டிருந்தாலும் என்னையறியாத ஒரு ஒரு நிதானத்தை உணர்ந்திருந்தேன்.

திடீர் என கட்டிலின் ஆன்மா பேசத்தொடங்கிற்று. எனது மனச்சாட்சியோ அதன் கருத்துக்களை ஆதரிப்பது போன்றதொரு புன்னகையுடன் அமர்திருந்தது.

"உனது போக்கு சரியில்லை, குடித்திருக்கிறாய் என்றது கட்டிலின் ஆன்மா.

மனச்சாட்சி அதை ஆமோதிப்பது போல தலையை மேலும் கீழுமாய் ஆட்டிக்கொண்டது.

"சற்று சுயவிமர்சனம் செய்து கொள்" என்று மனச்சாட்சி உரைத்த போது அதன் கழுத்தை அப்படியே திருகினால் என்ன என்றிருந்தது எனக்கு. கடும் பார்வை ஒன்றை ஒன்றை வீசினேன்.

மெதுவாய் ஏளனப்புன்னகை செய்தது மனச்சாட்சி. மனச்சாட்சியை எரித்துவிடுவது போல் பார்த்தேன்.

என் காதுகளின் செவிப்பறைகளில் கட்டிலின் ஆன்மா பேசுவது எங்கோ தொலைவில் ஒலிப்பது போல் ஒலித்துக்கொண்டிருந்து.

இன்னுமாரு ஒரு கிளாஸ் கொன்யாக் விழுங்கிக் கொண்டேன். சற்று கைத்தது. ஒரு ரொல்ஸ்ஐ கடித்துக் கொண்டேன். "பேசு" என்றது கட்டிலின் ஆன்மா. மனச்சாட்சி அமைதியாய் என்னைப் பார்த்தபடியே இருந்தது.

"நீதானே பேசவேண்டும் என்றாய்" என்றேன் நான், வீம்பாய் "உன் மனதை நாம் அறிவோம்" என்றன கட்டிலின் ஆன்மாவும், மனச்சாட்சியும் ஒரே சமயத்தில்.

அவர்கள் இருவரும் எனக்கெதிராய் ஒற்றுமையானதை என்னால் தாங்கமுடியாதிருந்தது. இன்னுமொரு கிளாஸ்ஐ ஊற்றிக் கொண்டேன். "என்ன " ..... " அறிவீர்கள்" என்றது உட்சென்ற கொன்யாக். அவர்களிருவரையும் என்னால் நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

நீ செய்யும் செயலை மன்னிக்க முடியாது என்றது கட்டிலின் ஆன்மா.

"நான் என்ன கொலையா செய்துவிட்டேன்" என்றேன். அவர்கள் இருவரும் புன்னகைத்துக் கொண்டார்கள். எனக்குள் எரிச்சல் பற்றியெரிந்து கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது.

"இல்லை, ஆனால் என்னைக் கொடுமைப்படுத்துகிறாய்" என்றது கட்டிலின் ஆன்மா "என்னையும் தான் என்றது" மனச்சாட்சி

"பேசுவதை தெளிவாய் பேசுங்கள்" என்றபடியே மேலும் ஒரு கிளாஸ்ஐ வாயினுள் கவிட்டுக்கொண்டேன்.

கட்டிலின் ஆன்மா பேசாதிருந்தது. மனச்சாட்சியோ .. என்னை ஊடுருவிப்பார்த்து.

தலையைக் குனிந்து கொண்டேன். பின்பு மீதமாய் இருந்த கொன்யாக்ஐ குடித்து, கடைசித் துளியையும் நாக்கால் தட்டிக் குடித்தேன். பின்பு "ரோல்ஸ்"ஐ கடித்தேன்.

சில நிமிடங்கள் ஓடியதும், அமெரிக்காவின் வான்படையை மட்டுமல்ல முப்படையையும் எதிர்க்கும் வல்லமை வந்தது போலிருந்தது.

கட்டிலின் மனச்சாட்சி " நீ என்ன செய்கிறாய் என்று உனக்குத் தெரியும் என்றது"

எனது பொறுமை காற்றில் பறக்க என்ன மண்ணாங்கட்டியை செய்கிறேன் என்று கத்தியபடியே மேசையில் ஒரு குத்து குத்தினேன். மேசையில் இருந்த பொருட்கள் அனைத்தும் அதிர்ந்து அடங்கின.

"மெதுவாய் பேசு, நிதானத்தை இழக்காதே" என்றது மனச்சாட்சி நூல் அறுந்த பட்டம் போல், நிதானம் காற்றில பறக்க, பச்சைத் தூஷணத்தால் பேசினேன்.

மனச்சாட்சி என்னைப்பார்த்தபடியே மௌனித்திருந்தது. என்னால் மனச்சாட்சியை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. நிலத்தைப்பார்த்தபடியே கட்டிலின் ஆன்மாவிடம் புரியும்படி சொல் என்று புறுபுறுத்தேன்

ம்.. கொட்டிபடியே சொல்லிற்று கட்டிலின் ஆன்மா, இப்படி: உனது கட்டில் விரிப்பையும், தலையணையுறையும், போர்வையும் தயவு செய்து சலவை செய்..... என்னால் தாங்கமுடியவில்லை.உட்சென்ற கொன்யாக்கும், அமெரிக்க முப்படையையும் எதிர்க்கும் சக்தியும் கண நேரத்தில் காலியாகியிருந்தன. கட்டிலின் ஆன்மா கண்சிமிட்ட,

மனச்சாட்சி புன்னகைத்தது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய செய்திச் சுருக்கம்



- **10 பேர்ச்சில் வீடு நிர்மாணிப்பு.**

மலையக தோட்டத் தொழிலாளர்கள் அனைவருக்கும் 10 பேர்ச் காணியுடன் தனி வீடு அமைத்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் மீரியபெத்த தோட்ட அனர்த்தத்தில் உயிரிழந்த பாதிக்கப்பட்ட உடன் பிறப்புகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை முற்பகல் 10 மணிக்கு பதுளை பிரதான பஸ்தரிப்பிடத்திற்கு முன்பதாக ஊவா பிரஜைகள் ஒன்றியத்தால் நடத்தப்படவுள்ளது.

- **வன்னிமக்களும் - வீட்டுக் கடன்களும்**

வீட்டுக் கடன்களை ஏனையவர்களைவிடவும் வன்னி மக்கள் ஒழுங்கான முறையில் செலுத்துவதாக வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

- **மலவாயிலில் தங்கம் கடத்தல்**

டுபாயில் இருந்து ஒருகோடியே 45 லட்சம் 'ரூபா பெறுமதியான 29 தங்க பிஸ்கட்களை மலவாயிலில் மறைத்து இலங்கைக்கு கடத்தி வந்த இருவர் மத்தல விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். மருதனை மற்றும் கட்டுகஸ்தொட்ட பகுதிகளைச் சேர்ந்த 57 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

- **13ஐ நிறைவேற்ற 24 மணிநேரமும் எடுக்கவில்லை.**

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது '1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற இரண்டு வருவங்கள் சென்றது. ஆனாலும் 13ஆம் திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற 24 மணித்தியாலமும் செல்லவில்லை' என்றும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குமாறு கோறும் எதிர்க்கட்சியினர், நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அமர்வில் கலந்து கொள்ளாததை மறந்து உரையாற்றுகின்றனர்' என்றும் தெரிவித்தார்.

- **தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

கொழும்பு துறைமுக சுங்கத்தில் முன்னெடுக்கப்படும் சோதனை செயன்முறைகள் மெதுவாக முன்னெடுக்கப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள இலங்கை கொள்கலன் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் அச்செயன்முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

- **கொஸ்லாந்தை பாடசாலையில் மீண்டும் தஞ்சம்**

மண் சரிவு அபாயம் ஏற்படும் என்ற அறிவிப்பின் பின்னர் மீண்டும் கொஸ்லாந்தை பாடசாலையில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்

- **சிதைந்த தலையுடன் ஆண் சடலம் மீட்பு**

20 வருடமாக ஒரே பாடசாலையில் பணிபுரியும் அதிபரினால் எங்களது பிள்ளைகளுக்கு முறையான கல்வி நடவடிக்கைகள் இல்லை. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதால் ஹட்டன் கல்வி வலயத்திற்குட்பட்ட மஸ்கெலியா மொக்கா தமிழ் மகா வித்தியாலய அதிபரை வேண்டாம் எனக் கோரி 100க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பாடசாலைக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

- **அதிபரை தாக்கியதால் பிரதேச சபை உப தலைவர் கைது**

சமய வழிபாடு ஒன்றிற்காக மாணவர்களை, அதிபர் கெக்கிராவ நகருக்கு அனுப்பியுள்ளார். அதன்போது மழை பெய்ததால் உப தலைவரின் பிள்ளை உள்ளிட்ட மாணவர்கள் நனைந்துள்ளனர். தன்னுடைய பிள்ளை மழையில் நனைந்தமை தொடர்பில் கெக்கிராவ பகுதி பாடசாலை அதிபர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் கெக்கிராவ பிரதேச சபை உப தலைவர் அநுர பண்டார ஹேரத் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

- **யாழ்நீதிமன்ற நீதிபதிக்கு திடீர் இடமாற்றம்**

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் வவுனியா மேல் நீதிமன்றிற்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நீதிச்சேவை ஆணைக்குழுவினால் எதிர்வரும் 17 ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் நீதிபதி பிரேம்சங்கருக்கு வழங்கப்பட்டுள்ளது.



- **இராஜினாமா செய்தார் பாணந்துறை நகர முதல்வர்**

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளரும் பாணந்துறை நகர சபை முதல்வருமான நந்தன குணதிலக்க நேற்று (14.11.2014) தனது பதவிகளை இராஜினாமா செய்யதுள்ளார்.

- **அரசாங்கம் ஒரு வீட்டைக் கூட நிர்மாணிக்கவில்லை**

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீடுகளை இழந்த மக்களுக்கு இந்த அரசால் எந்தவொரு வீடும் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அதேவேளை 2015 ஆம் ஆண்டுக்குள் மலையக மக்களுக்கு 175000 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமென அரசு அறிவித்துள்ளபோதும் இதுவரை 1319 வீடுகள் மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் 2015 இற்குள் மலையக மக்களின் வீடில்லாப் பிரச்சினை தீர்க்கப்படுமாவென ஐ.தே.க. பிரதித் தலைவரும் எம்.பி.யுமான சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பினார்.

- **தூக்கு தண்டனை ரத்து**

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 தமிழக மீனவர்களை எல்லை தாண்டி வந்ததாகக் கூறி இலங்கை கடற்படை கைது செய்த 5 தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்கு தண்டனையை ரத்து செய்து இலங்கை ஜனாதிபதி ராஜபக்' உத்தரவிட்டிருப்பதாக ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

- **முன்னாள் போராளியின் கொலைக்கு மன்னார் ஆயர் கண்டனம்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையில் பணியாற்றிய முன்னாள் போராளியான நகுலேஸ்வரன் அவரின் வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதை மன்னார் மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

- **இலங்கை தென்கொரிய கடற்படை வீரர் நிகழ்வு**



இலங்கை மற்றும் தென்கொரிய கடற்படை வீரர்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு, செவ்வாய்க்கிழமை (11.11) மாலை கொழும்பு காலிமுகத் திடலில் நடைபெற்றது.

- **விசேட சேவையில் தேசிய அடையாள அட்டைகள் வழங்கி வைப்பு**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை இம்மாதம் 22ஆம் திகதி மற்றும் 29 ஆம் திகதிகளில் விசேட சேவையை முன்னெடுக்கவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

- **பிரான்சில் யாழ் இளைஞன் மரணம்**

பிரான்ஸில் வசித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் மண்கும்பான் 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 25 வயதுடைய வாசலிங்கம் வருண்ராஜ் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். இவர் 8 வருடங்களாக பிரான்ஸில் தொழில்புரிந்த நிலையில் திங்கட்கிழமை இரவு வேலை முடிந்து அறைக்குச் சென்றுள்ளதுடன் செவ்வாய்க்கிழமை காலை அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

- **ஜனாதிபதி மீதான வழக்குத் தாக்கல் விசாரணையில்**

இலங்கையின் அரசியல் யாப்பின்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு விசாரணை ஒன்றை நடத்த முடியாது என்று முன்வைக்கப்பட்ட வாதத்தை நிராகரித்த நீதிபதி வழக்கை தொடர்ந்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார்.

அரசியல் யாப்பின்படி ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு விசாரணையை நடத்த முடியாது என்றாலும், அவர் நிதியமைச்சராகவும் செயற்படுவதால், நிதியமைச்சர் என்ற வகையில் அவரையும் வழக்கில் சேர்க்க முடியும் என்று நீதிபதி கூறியுள்ளார். கோல்டன் கீ நிறுவனத்தில் பணத்தை வைப்புச் செய்ததனால் பாதிக்கப்பட்டவர்களின் சங்கத்தின் சார்பில் ஜனாதிபதி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக அந்த அமைப்பின் தலைவி துஷாந்தி ஹபுகொட தெரிவித்தார்.

- **எதிர்கட்சித் தலைவரின் கருத்தினால் சர்ச்சை**

ஊவா மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் கருத்தினால் சர்ச்சை அமைச்சர் செந்தில் தொண்டமான் உட்பட மூவர் வெளிநடப்பு!

- **பெண் உறுப்பினர்களுக்கும் ஜகாதிபதிக்குமிடையிலான சந்திப்பு**



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பெண் உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு அலரிமாளிகையில் 13.11.2014 அன்று நடைபெற்றது.

- **சிறகுகள் வெட்டப்பட்ட விமல்:**

அமைச்சர் விமல் வீரவன்ச இன்று அரசாங்கத்தில் சிறகுகள் வெட்டப்பட்ட பறவையைப் போன்றே உள்ளார். திறமையான அவருக்கு உரிய இடத்தை பெற்றுக்கொடுக்க நாம் போராடுவோம் என ஐ.தே. கட்சி எம்.பி. சஜித் பிரேமதாச நேற்று சபையில் தெரிவித்தார்.

# நிகழ்வுகள்

## மாபெரும் விருது வழங்கும் விழா

கிழக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக மட்டக்களப்பில் முதல் தடவையாக இடம்பெற்ற குறுந்திரைப்படம் மற்றும் காணொளி பாடல்களுக்கான சிறந்த தெரிவுக்கு விருதுவழங்கும் விழா அண்மையில் செங்கலடி வேல்ஸ் சினிமா பட்டறையின் ஏற்பாட்டில் அதன் ஸ்தாபக தலைவர் ரீ.கிருஷ்ணா தலைமையில் அரசடி தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.



இதன்போது சிறந்த காணொளி பாடலுக்கான குழந்தை நட்சத்திரத்திற்கு விருது வழங்கப்பட்டது, மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. பல அதிதிகளும், இலங்கை பூராகவும் இருந்து பல கலைஞர்கள் பங்கேற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.



- யு.உதயகாந்த் -



## பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து....

### விதவைகளின் வாழ்வாதாரத்திற்கு ஆடுகள் வழங்கி வைப்பு

- மூதூர் நிரூபர் -

திருகோணமலை மாவட்ட கன்னியா மாங்காயூற்று கிராமத்தில் உள்ள பெண்தலைமை தாங்கும் குடும்ப பெண்களிக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்தனன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 06 குடும்பங்களுக்கான ஆடு வளர்ப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்



ஆடுகளை கையளிக்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு 09 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கன்னியா மாங்காயூற்று கிராமத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்கடர். பி.புவனேந்திரன் மற்றும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மைய உத்தியோகத்தர் வ.ராஜ்குமார் மற்றும் பயனாளிகள் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



### போட்டோ பிரதி வழங்கி வைப்பு




தி/சல்லி அம்பாள் மகாவித்தியாலயத்திற்கு போட்டோ பிரதி இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. 07-11-2014 அன்று பாடசாலையில் இடம்பெற்ற வாசிப்பு மாத நிகழ்வுகளின் போது இப்போட்டோ பிரதி இயந்திரம் உத்தியோக பூர்வமாக பாடசாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 06


01. 2008ஆம் ஆண்டில் 366 நாட்களும், 2009 ஆம் ஆண்டில் 365 நாட்களும் உள்ளன. 2008 ஆம் ஆண்டில் ஜனவரி 1ஆந் திகதி செவ்வாய்க்கிழமையாகும். 2009 ஆம் ஆண்டில் ஜனவரி 1ஆம் திகதி வியாழக்கிழமையாகும். இதற்கேற்ப 2010 ஜனவரி 1ஆம் திகதி
   1. புதன் கிழமை 2. வியாழக்கிழமை
   3. வெள்ளிக்கிழமை

02. அனுலா பாடசாலை விட்டு வரும் போது, அவளது நிழல் அவளுக்கு முன்னே செல்லுமாயின், அவளது வீடு அமைந்துள்ள திசை எது?
   1. வடக்கு 2. கிழக்கு 3. மேற்கு

03. ஒரு வகுப்பிலுள்ள 10 மயணவர்களிடையே 7 பேர் கிளி வளர்க்கின்றனர். 6 பேர் நாய் வளர்க்கின்றனர். சிலர் நாயையும், கிளியையும் வளர்க்கின்றனர். எனின், இவ்வாறு நாயையும், கிளியையும் வளர்க்கும் மாணவர்கள் எத்தனை பேர்?
   1. 3 2. 6 3. 7

04. ஒரு கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை ரூபா 80 ஆகம். 2 கிலோ 350கிராம் வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?
   1. ரூ 180 2. ரூ 188 3. ரூ 189

05. 8943 என்ற எண்குறியில் இலக்கம் 9இன் இடப்பெறுமானம் யாது?
   1. ஆயிரம் 2. நூறு 3. பத்து

06. செங்கோண முக்கோணமுள்ள உரு எது?
1. 2. 3.


07. நாணயத் தாள்களில் பெறுமதி கூடியது எது?
   1. ரூ 500 2. ரூ 1000 3. ரூ 5000

08. நீரின் மூலம் பரம்பலடையும் பழம் எது?
   1. தேங்காய் 2. மரமுந்திரிகை
   3. புலி நகம்

09. பூச்சியுண்ணித் தாவரங்கள் பூச்சிகளை பிடித்து உண்ணுவதற்கு காரணம் எது?
   1. தாவர உணவை உண்பதற்காக
   2. பூச்சியை சமிபாடடையச் செய்வதற்காக
   3. பூச்சிகளைக் கொல்லுவதற்காக

10. தான் வாழும் சூழலின் நிறத்திற்கு ஏற்ப, உடலின் நிறத்தை மாற்றும் பிராணி எது?
   1. ஓணான் 2. பச்சோந்தி
   3. கிளி

11. சோறு சமைப்பதற்காக அரிசியைக் கலைவதற்கு உதவும் பாத்திரம்
   1. தாச்சி சட்டி 2. பானை 3. அரிக்குஞ்சட்டி

12. உடல் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்கு செலுத்தும் உணவுச் சோடி
   1. பசும் பாலும், சக்கரைப் பொங்கலும்
   2. முட்டையும், கோதுமை மாவும்
   3. பயறும், சோயாஅவரையும்
   4. சோயா அவரையும், பசளியும்

13. எமது நாட்டின் பண்டைக்காலம் பற்றிய தகவல்களை அறிய உதவுவது எது?
   1. திரிபீடகம் 2. உபநிடதம்
   3. ஆரியவம்சம் 4. மகாவம்சம்

14. இந்தியாவிலுள்ள அஸந்தா ஓவியங்களுக்கு ஒப்பான கலைத்துவ படைப்புக்கள் கணப்படும் இடம் எது?
   1. சிகிரியா 2. கிரிகொரங்க
   3. தில்லானா 4. தேவிநுவட்ட

15. கண்டி பெரஹராவின் போது பயன்படுத்தும் பண்டைய வாத்தியக்கருவி எது?
   1. பறை மேளம் 2. தப்பட்டை
   3. சங்கு 4. நாதஸ்வரம்

**சென்ற வார விடைகள்**

01. 3
02. 3
03. 2
04. 2
05. 1
06. 3
07. 2
08. 3
09. 1
10. 2
11. 1
12. 3
13. 1
14. 1
15. 1

# குறுக்கெழுத்து புதிர் 035

முடிவுத் திகதி : 21.11.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ரி | | 3 | | 19 | 20 |
| | ■ | ள் | 4 | மு | 21 | | ப | மி |
| | 5 | | | 22 | | | 6 | |
| 7 | ட | | ■ | | க் | ■ | 23 | |
| 8 | | ஞ | 9 | | | ■ | மா | |
| | ■ | ■ | 10 பா | | | | | ■ |
| 11 | | | | ■ | ■ | 12 | 25 | |
| 13 | 24 | ணி | ■ | 14 | | | 15 | |
| பு | 16 | | 17 | | ■ | 18 | ட் | |

**இடமிருந்து வலம்**

1. மருமகள் புகுந்த வீட்டிற்கு எடுத்துச் செல்வது
2. ஆசிரியை பிள்ளைகளுக்கு இதில் நிற்கும்படி கூறினார்.
3. பல விதமான கடைகள் காணப்படுவதை குறிக்கும் - திரும்பியுள்ளது.
4. பௌர்ணமி நிலவை இவ்வாறும் கூறலாம்.
5. பொருட்களை சேகரித்து வைக்குமிடம்
6. மகிழூர்ந்தின் பேச்சு வழக்குச் சொல்
7. நாகம் கருவி இல்லாமலே இதை எடுக்கும்.
8. இலக்கியம் சார்ந்தவற்றில் ஈடுபாடு உடையவர்கள்
9. உடைத்தெறிதலைக் குறிக்கும் மூன்றெழுத்துச் சொல் திரும்பியுள்ளது.
10. கலந்துரையாடலை இவ்வாறும் கூறலாம். - குழம்பியுள்ளது.
11. தானங்களை அள்ளி அள்ளி கொடுப்போர்.
12. ஆண்களின் இவ்வெறியினால் பெண்கள் அழிந்து போகின்றனர். - குழம்பியுள்ளது.
13. முதன் முதல் செய்வதை இவ்வாறு கூறுவர் - குழம்பியுள்ளது.
14. நால் நிலங்களுள் ஒன்று
15. இது வந்தால் பத்தும் பறந்து போகும் - திரும்பியுள்ளது.
16. தேவையற்ற பொருட்களை முன்னைய காலத்தில் இதில் வைப்பர். மூன்றெழுத்து சொல் திரும்பியுள்ளது.
17. தமிழரின் தோலிசைக் கருவிகளில் ஒன்று
18. கார்த்திகை விளக்கீடு அன்று இதுவே மிக முக்கியம்

**மேலிருந்து கீழ்**

1. ஓர் குழுவினர் அணியும் ஒரே மாதிரியான ஆடை
2. மீன்பிடிக்க கடலுக்கு இதிலும் செல்வர்
5. தானியங்களுள் ஒன்று
9. பூமிக்கு ஒத்த சொல் - ஈரெழுத்து சொல் திரும்பியுள்ளது.
10. வெள்ளை நிறத்தை இதற்கு ஒப்பிடுவர்.
11. அன்புக்கு எதிர்ச்சொல்
12. இலங்கையில் உற்பத்தியாகும் விசுக்கோத்தின் வகை ஒன்று
14. '.............. ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா'
19. கிராமத்தில் பக்கத்து வீட்டு அல்லது தோட்டத்து காரரை இவ்வாறு அழைப்பர் - குழம்பியுள்ளது.
20. மிக ருசியான உணவை இதற்கு ஒப்பிட்டு கூறுவர்.
21. மது அருந்தினால் ஏற்படுவது.
22. நம்மிடம் நல்ல இது இருந்தால், அனைத்திலும் வெற்றி கிட்டும்.
23. பெண்களுக்கு பெரியோரால் கொடுக்கப்படும் ஆலொசனை எது நடந்தாலும் ................ கீழிருந்து மேலாக
24. ஒன்றைக் காண்பதற்கு தேவையானது
25. இத்திருத்தலத்திலே அகோரிகள் அதிகம் காணப்படுகின்றனர்.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 034 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | 22 ல | 2 க | ம் | ப | ன் | 3 லி | ட் | 23 இ |
| டி | 4 ம | ண் | ச | ரி | வு | ங் | 5 சி | ரா |
| வா | ங் | 6 கா | த | 24 ல் | ■ | 7 கு | கை | மா |
| 8 ள | க | 9 ணி | 25 ப | ப | ■ | 10 சா | ல் | ய |
| 30 ம் | ம் | ப் | 11 தா | லி | ■ | 12 மி | 26 கை | ண |
| ய | ■ | 13 பு | 27 தை | ய | ல் | ■ | ப | ம் |
| ண | ■ | 14 இ | ல | ங் | 15 கை | தி | ■ | ■ |
| 28 நா | 16 கு | சு | ம் | 17 பு | ட | 18 வை | 29 க | அ |
| 19 டி | த | 20 ம | ன் | னி | 21 ப் | பு | ளி | பு |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**
*திருமதி. ஜெ. பிரசானினி*
*32/4, மத்தியவீதி, உவர்மலை, திருகோணமலை.*

# சிறுவர் முரசு



**சிந்திக்க .. ..**

உனக்காக சிரிக்கும் உதடுகளை விட:
உனக்காக கண்ணீர் விடும்
கண்களை நேசி:
அது உப்பாக இருந்தாலும்,
உண்மையாக இருக்கும்!!!

## சாதுர்யமான மீனவன் குட்டிக்கதை

முன்னொரு காலத்தில் பாரசீக நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு மீன் என்றால் உயிர். ஒரு நாள் மீனவன் ஒருவன் மிகவும் அழகான பெரிய மீன் ஒன்றை அவைக்குக் கொண்டு வந்து அரசனிடம் தந்தான். அந்த மீனைக் கண்டு மகிழ்ந்த அரசன் மீனவனுக்கு உடனே நூறு பொற்காசுகள் பரிசளிக்குமாறு கட்டளை இட்டான். பக்கத்திலே அமர்ந்திருந்த அரசிக்கு இந்தச் செயல் பிடிக்கவில்லை.

அரசனைப் பார்த்து 'நாளைக்கே நம் வீரர்கள் யாரேனும் செயற்கரிய வீரச் செயல் செய்து வந்தால், நீங்கள் வழக்கம் போல நூறு பொற்காசுகள் பரிசளிப்பீர்கள். ஆனால், பரிசு பெறுபவன் ஒரு மீனவனுக்குக் கொடுத்ததைத் தானே அரசர் நமக்கும் தந்துள்ளார் என்று நினைப்பான். அதனால், அந்த மீனவனுக்குக் கொடுத்த பரிசை ஏதேனும் சொல்லித் திரும்ப வாங்கிக் கொள்ளுங்கள் என்றாள்.

'நீ சொல்வது சரிதான். ஆகால், கொடுத்த பரிசை மற்றவர் குறை சொல்லாதபடி எப்படித் திரும்ப வாங்குவது?' என்று கேட்டான் அரசன்.

'அந்த மீன் ஆணா? பெண்ணா?' என்று கேளுங்கள். அவன் ஆண் என்று சொன்னால் பெண் மீன் வேண்டும் என்றும் பெண் என்றால் ஆண் மீன் வேண்டும் என்றும் கூறி மீனைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்றாள்.

அரசனுக்கு தன் மனைவியின் அறிவுரை பிடித்தது. மீனவனைப் பார்த்து 'நீ கொண்டு கொண்டு வந்த மீன் ஆணா? பெண்ணா? எனக் கேட்டார். அதற்கு அந்த மீனவன் பணிவாக, 'அரசே! இது ஆணுமல்ல, பெணண்ணுமல்ல பொதுவான மீன்' என்றான்.

மீனவனிடமிருந்து தான் சற்றும் எதிர்பாராத பதில் வந்ததைக் கண்டு அவனுடைய சாதுர்யம் கண்ட மகிழ்ச்சியில் மேலும் நூறு பொற்காசுகள் தரும்படி கட்டளை இட்டான்.



நடந்ததை சகித்துக் கொள்ள முடியாத அரசி செய்வதறியாது அரசரை சற்று நேரம் உற்று நோக்கினாள். மேலும் 'ஐயோ! நுாறு பொற்காசுகள் கொடுத்ததே அதிகம். அதைத் திரும்ப வாங்குங்கள் என்றால், மேலும் நுாறு பொற்காசுகள் தந்துவிட்டீர்களே! என்றாள் கோபத்துடன்.

- எப்பொழுதும் சிந்தித்து செயல்படல் வேண்டும் -



செல்வி.ம.மிருக்ஷனா, திருகோணமலை

## என்னவோ?

தம்பி - தங்கை பசிக்குதோ?
சாப்பாடென்ன வேணுமோ?
'சம்பல்' பிட்டு வேணுமோ?
'தண்ணிச்சோறு' வேணுமோ

அப்பம் தின்ன ஆசையோ?
அடுக்குத் தோசை தேவையோ?
சப்பும் ரொட்டி விருப்பமோ?
'சாம்பார் - இட்லி' வேணுமோ?

கடிக்கும் வடையும் உள்ளதாம்!
கடலை - பயறும் உள்ளதாம்!
குடிக்கும் கஞ்சி நல்லதாம்!
கூழும் கூட நல்லதாம்!

உப்புமாவும் உண்டு தான்,
உங்கள் விருப்பம் என்னவோ?
தப்பும் பள்ளி நேரமே,
சாப்பிட்டோடிப் போங்களே!

[illegible]
(ஈச்சந்தீவு, கிண்ணியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. காரணி காண்க. $4a^3 - 9a$

02. தீர்க்குக. $2x + 6y = 8$ / $5x - 3y = 14$

03. செவ்வகம் ஒன்றின் நீளம் (x + 5)cm உம் அகலம் (x + 2)cm உம் ஆகும். இச் செவ்வகத்தின் பரப்பளவு $40cm^2$ எனின், x இனாலான இருபடிச் சமன்பாடு ஒன்றை பெற்று தீர்ப்பதன் மூலம் செவ்வகத்தின் நீள, அகலங்களைக் காண்க?

04. சார்பு $y = x^2 - 6x + 8$ இன் வரைபை வரைவதற்கு -1 தொடக்கம் 7 வரையிலான ஆள்கூற்று பெறுமான அட்டவணையை தயாரிக்குக.
1. x = 3 ஆகம் போது இன் பெறுமானம் காண்க.
2. வரைபுத் தாளில் x அச்சு வழியே 10சிறிய பிரிவுகளை ஓர் அலகாகவும் y அச்சு வழியே 10 சிறிய பிரிவுகளை ஓர் அலகாகவும் கொண்ட அளவிடையை எடுத்து சார்பின் வரைபை வரைக.
3. வரைபிலிருந்து
   - அ. சமச்சீர் அச்சின் சமன்பாடு யாது?
   - ஆ. திரும்பல் புள்ளியின் ஆள்கூறு
   - இ. சார்பு மறை அதிகரிக்கும் x இன் பெறுமான வீச்சு
   - ஈ. $x^2 - 6x + 8 = 0$ இன் மூலகங்கள் ஆகியவற்றைக் காண்க.

05. கூட்டல் விருத்தி ஒன்றின் ஒன்பதாம் உறுப்பு 35உம் இவ்விருத்தியின் 14ஆம் உறுப்பு 3 ஆம் உறுப்பின் மடங்காகும். இவ்விருத்தியின் முதலுறுப்பு மற்றும் பொதுவித்தியாசம் என்பவற்றைக் காண்க.

06. 1/10, 1/5, 2/5 . . . . எனும் விருத்தியில் 7 ஆம் உறுப்பையும், இவ்விருத்தியின் முதல் 10 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

07. கிழக்கு மேற்காக அமைந்துள்ள நேர்பாதை ஒன்றில் செல்லும் ஒருவனுக்கு P என்னும் புள்ளியிலிருந்து நோக்கும் போது C என்னும் நிலைக்குத்தான தென்னை மரம் ஒன்றின் திசைகோள் 108 பாகை ஆகம். அவர் P யிலிருந்து 140மீ தூரம் கிழக்கு நோக்கிச் சென்று நோக்கும் போது தென்னை மரத்தின் திசைகோள் 132 பாகை எனக் காணப்பட்டது.




1. உருவைப் பிரதி செய்து பூரணப்படுத்தி மேற்கண்ட தரவுகளை அதிற் குறிக்க.
2. பாதையிலிருந்து தென்னை மரத்திற்குள்ள மிகக் கிட்டிய தூரத்தைக் காண்க.
3. P யிலிருந்து தென்னை மரத்துக்குள்ள தூரத்தைக் காண்க.

08. 1. r ஆரையுள்ள கோளம் ஒன்றின் கனவளவு $V = 4/3\pi r^3$ ஆகம். இச்சூத்திரத்தில் ஆரை r ஐ எழுவாயாகத் தருக.
2. கோளத்தின் கனவளவு $381.51cm^3$ உம் $\pi = 3.14$ உம் எனின், ஆரை r ஐ எழுவாயாகக் கொண்ட சூத்திரத்தில் பிரதியிடுக.
3. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி கோளத்தின் ஆரையைக் காண்க.
4. இக்கோளமானது உருவாக்கப்பட்டு சம கனவளவுள்ள 8 கோளங்களை தயாரிக்கும் போது ஒரு கோளத்தின் ஆரையை ஊகித்தறிக?

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்வரும் விலங்குகளிடையே இலங்கைக்கே உரித்தான விலங்காக அமையாதது எது?
   1. நீலப்புள் 2. பச்சைப்புடையன் 3. திலாப்பியா 4. சருகுமான்


02. பற்றாசு என்பது உலோகப் பகுதிகளைப் பற்றாசு பிடிக்கப் பயன்படுத்தும் கலப்பு உலோகமாகும். இக்கலப்பு உலோகத்தில் உள்ள ஒரு பிரதான கூறு வெள்ளீயம் என்னும் உலோகமாகும். மற்றைய உலோகம்,
   1. நாகம் 2. இரும்பு 3. அலுமினியம் 4. ஈயம்

03. தாக்கத் தொடரில் உலோகம் இருக்கும் இடம் தொடர்பாக விளக்க முடியாதது
   1. தாக்கத்திறன் மிக்க உலோகங்களைப் பிரித்தெடுத்தல் கடினமாக இருத்தல்
   2. இரும்பு, வெள்ளீயம், ஈயம் என்னும் உலோகங்கள் இயற்கையில் காணப்படும் மூலகங்களாக இராமை
   3. தங்க ஆபரணங்கள் நெடுங்காலத்திற்கு மாற்றமடையாமல் இருத்தல்.
   4. உணவு சமைக்கும் பாத்திரங்களாக அலுமினியத்தைப் பயன்படுத்தல்

04. பின்வருவனவற்றுள் எது நீர் நிலைகளை மாசடையச் செய்வதற்கான ஓர் உதாரணமாகக் கருத முடியாதது.
   1. களை கொல்லிகளின் உபயோகம்
   2. இரசாயனப் பொருட்களின் உபயோகம்
   3. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேற்றப்படும் நிறமுடைய நீர்
   4. விறகு எரிக்கும் போது பெறப்படும் புகை

05. மின்பகுப்பின் மூலம் மின்முலாமிடும் போது யாதாயினும் ஓர் உலோக மேற்பரப்பின் மீது நிலையான சீரான மின்முலாமிடுதலைப் பெறுவதற்குப் பின்பற்ற வேண்டிய நடைமுறை யாது?
   1. மின்பகுபொருளை அசையாமல் வைத்திருத்தல்
   2. மின்பகுபொருளின் வெப்பநிலையைத் தொடர்ச்சியாக மாற்றுதல்
   3. மின்பகுப்பிற்கு மிகச்சிறிய மின்னோட்டத்தைப் பிரயோகித்தல்
   4. மின்முலாமிட வேண்டிய பொருளின் மீது கொழுப்புப் படையைப் பூசுதல்

06. குவியத்தூரம் f ஆகவுள்ள குவிவு வில்லை ஒன்றின் இரு பக்கங்களிலும் நான்கு புள்ளிகள் உருவில் உள்ளவாறு இருக்கின்றன. இங்கு AB = BC = CD = DE = f




இதிலே காணப்படும் திரை மீது விம்பம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருளை எங்னே வைத்தல் வேண்டும்?
   1. A இற்கு அப்பால் (வெளியே) 2. A யிற்கும் B யிற்குமிடையே
   3. B யிற்கும் C யிற்குமிடையே 4. C யிற்கும் D யிற்குமிடையே

07. 44கிராம் காபனீரொட்சைட்டிலுள்ள அணுக்களின் எண்ணிக்கையைச் சரியாகக் குறிப்பது எது?
   1. $6.023 \times 10^{23} \times 3$ 2. $6.023 \times 10^{23}$ 3. $44 \times 6.023 \times 10^{23}$ 4. $44 \times 3.011 \times 10^{23}$

08. வளர்ச்சி ஓமோன் மிகையாகச் சுரப்பதன் மூலம் ஏற்படத்தக்க நிலைமை பின்வருவனவற்றில் யாது?
   1. எளிய கழலை 2. விழிபிதுங்கற் கழலை 3. பேருருவுடைமை
   4. குறள் நிலைமை

## பாடம் : வரலாறு

1. சர்வதேச சமாதானத்தை ஏற்படுத்துவதே எனது நோக்கம் என கூறியவர்
   1. பிராங்ளின் ரூஸ்வெல்ட் 2. ஜோசப் ஸ்டாலின்
   3. வின்சன்ட் சேர்ச்சில் 4. ஹிட்லர்

2. A லூசிட்டானியா கப்பல் தாக்கப்படல்
   B பேர்ள் துறைமுகம் தாக்கப்படல்
   C சர்வதேச சங்கம் ஸ்தாபிக்கப்படல்
   D ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தல் மேல் குறிப்பிட்டவற்றை கால ஒழுங்கில் தருக.
   1. ABCD 2. ACDB
   3. ACBD 4. BADC

3. ஐக்கிய நாடுகளின் செயலாளரை தெரிவு செய்ய சிபாரிசு செய்யும் சபை
   1. பொதுச்சபை 2. பாதுகாப்புச்சபை
   3. சர்வதேச நீதிமன்றம் 4. நம்பிக்கை பொறுப்புச்சபை

4. ஐக்கிய அமெரிக்கா வெளிநாட்டு வர்த்தகத்தில் முதன் முதலில் ஈடுபட்ட காலத்தில் ஜனாதிபதி யார்?
   1. ஜோர்ஜ் வாஷிங்டன் 2. ஜோன்.எப். கெனடி
   3. மெகன்ஸி 4. ஆபிரகாம் லிங்கன்

5. சீனாவில் ஹேமின்டாங் கட்சி வளர்ச்சிக்கு ஆலொசணை வழங்கிய ரஷ்ய நாட்டவர் யார்?
   1. ஜோசப் ஸ்டாலின் 2. லெனின்
   3. மைக்கல் பெரோட்டின் 4. நிகிடா குருஷேவ்

வினா 01

i. பிரான்சியப் புரட்சியை நடத்துவதற்கு துணைநின்ற தத்துவஞானிகள் மூவரையும் தருக.

ii. பிரான்சியப் புரட்சிக்கு காரணமாக அமைந்த விடயங்கள் இரண்டை குறிப்பிடுக.

iii. ஜேர்மனி, இத்தாலி ஒன்றிணைவதற்கு நெப்போலியன் பொனபார்ட்டின் செயற்பாடுகள் காரணமாக அமைந்த விதத்தை சுருக்கமாக விளக்குக.

iv. இத்தாலி ஒன்றிணைவதற்கு பின்வரும் நபர்களால் ஆற்றப்பட்ட பணிகளை சுருக்கமாக விளக்குக.
   A – ஜோசப்மசினி B – கரிபால்டி
   C – கவுண்கவூர்

வினா 02

i. A – சர்வதேச சங்கத்தை தோற்றுவித்தல்
   B – ஐக்கிய நாடுகள் சபையில் முதல் செயலாளர் நாயகமாதல்
   C – அணிசேராநாடுகள் உருவாக்கத்தில் பஞ்சசீல கொள்கையை முன்வைத்தல்
   மேற்படி ABC என தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய நபர்களைத் தருக

ii. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியால் ஏற்பட்ட சர்வதேச விளைவுகள் இரண்டை குறிப்பிடுக.

iii. கெடிபிடி போர்க்காலத்தில் ரஷ்யாவும் ஐக்கிய அமெரிக்காவும் தமது கொள்கையை பாதுகாத்து பரப்ப உருவாக்கிய அமைப்பினை குறிப்பிட்டு விளக்குக.

iv. கெடிபிடி போரின் பின் உலக சமாதானத்துக்கு ஐக்கியநாடுகள் சபை ஆற்றும் பணிகள் மூன்றை குறிப்பிட்டு விபரிக்குக.

**ஆசிரியர் : அகிலினி**

## Grammar

**Ex 01: Put in *for* or *since***

1. It's been raining ........................ lunch time.
2. Tom's father has been doing the same job ............ 20 years.
3. Have you been learning English .................. a long time?
4. Sarah has lived in London .................. 1985.
5. ...................... Christmas, the weather has been quite good.
6. Please hurry up! We've been waiting .................. an hour.
7. Kevin has been looking for a job ............. he left school.
8. The house is very dirty. We haven't cleaned it .......... ages.
9. I haven't had a good meal .................. last Tuesday.

**Ex 02 : Complete the sentences.**

1. Excuse me, ......................... a pen I could borrow?
2. Why are you holding your face like that? ............. a toothache?
3. .................... a bicycle when you were a child?
4.' .................. the time, please?' 'yes, it's ten past seven.'
5. When you did the exam, .................. time to answer all the questions?
6. I need a stamp for this letter. ......................... one?
7. 'It started to rain while I was walking home.' 'Did it? .................. an umbrella?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழமாகச்....

கோரிக்கை தொடர்பாக தமது கட்சி ஆழ்ந்து சிந்தித்தே விடைபகரவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறு ஆதரவளிப்பதன் மூலம் அக்கட்சி அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ள முடியும். அந்த வகையில் இச் சந்தர்ப்பத்தினை கூட்டமைப்பு பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராசபக்ச விடுத்துள்ள அழைப்பு தொடர்பாக வினவியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்த பின்னரான காலத்திலும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இரண்டாம் முறையாக தெரிவு செய்யப்பட்ட பின்னரும் இலகுவாக இந்த நாட்டின் தேசிய பிரச்சினையை தீர்த்து நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு தயாராக இருந்திருக்கின்றோம்.

தமிழ் மக்கள் தமது அபிலாசைகளைப் பெற்று கௌரவமாக தலைநிமிர்ந்து வாழும் வகையில் தேசிய பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்காகவும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் எழுத்து மூலமாக உட்பட பல்வேறு வழிகளில் எமது நல்லெண்ண வெளிப்பாடுகளைச் செய்திருந்தோம்.

யுத்தத்தின் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. விசேடமாக காணிவிவகாரம், இராணுவ மயமாக்கல், இளைஞர் யுவதிகளின் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பான விடயங்கள் உட்பட பல பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்புக்களை வழங்கி நிரந்தரமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல வழிகளில் நாம் முயற்சிகளை முன்னெடுத்த போதும் அது கைகூடியிருக்கவில்லை.

நாம் கண்ணியமாக வெளிப்படுத்திய நல்லெண்ணத்தை அரசாங்கம் முறையாகப் பயன்படுத்த தவறிவிட்டது. தற்போதும் கூட அதற்கு தயாராகவே இருக்கின்றோம். அவ்வாறிருக்கையில் அமைச்சர் பசில் ராஜபக்ச இவ்வாறான கருத்தை வெளியிட்டிருகின்றார். இந்தக் கருத்தை நாம் நிராகரிக்க மாட்டோம். தற்போது தேர்தலுக்கான அறிவிப்பொன்று வெளிப்படுத்தப்படவில்லை. இந்நிலையில் நாம் இதுவரையில் எவ்விதமான தெரிவுகளையும் செய்யவில்லை. அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதும் அது தொடர்பில் நாம் கூடி ஆராய்வோம். அச்சந்தர்ப்பத்தில் அமைச்சருடைய கருத்து தொடர்பில் ஆழமாக கவனம் செலுத்துவோம் என்றார்.

## அழிவை எதிர்கொள்ள...

வேண்டும் என்பதும் கடந்த 11ம் திகதி நடைபெற்ற மூதூரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இக்கூட்டத்தில் இராணுவம், காவல்துறை, கடற்படை, சுகாதார சேவை அலுவலர்கள், கல்விப்பணிப்பாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை, மின்சபை, பிரதேசசபை, கூட்டுறவுச் சங்கம் போன்ற முக்கிய அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணைந்து பிரதேசச் செயலாளரின் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றுள்ளது.

மக்கள் இடம்பெயர வேண்டி வருமாயின் எங்கெங்கு முகாம்களை அமைக்கலாம், நிவாரணப் பணிகளை யாரெல்லாம் மேற்கொள்ள வேண்டும், நீர் வழங்கும் வசதிகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பான ஆக்க பூர்வமான முடிவுகள் எட்டப்பட்ட இக் கூட்டத்தில் இடைத்தங்கல் முகாம்களில் அல்லலுறும் மக்களின் கதியினைப் பற்றி யாரும் பேசவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

அத்துடன் இக்கூட்டத்திற்கு மூதூர் பிரதேசச் சபையின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டு தமது பிரதேசங்கள் தொடர்பாகக் கருத்துக்களைத் தெரிவித்திருந்த போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று பிரதிநிதிகளும் அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லை.

இக் கூட்டத்தினை அடுத்து வான்படையினர் கடந்த 12ம் திகதி பயிற்சி நடவடிக்கையொன்றைக் கங்குவேலிப் பிரதேசத்தில் முன்னெடுத்துள்ளனர். உலங்கு வானூர்தியொன்று மழைபெய்து நிரம்பியிருந்த கங்குவேலி வயற்பரப்பில் மிகத் தாளப் பறந்து குறித்தவொரு இடத்தில் தரையை அண்டி சில நிமிடங்கள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் அதன் பின்னர் கங்குவேலி பிரதான வீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடமொன்றில் தரையிறக்கப்பட்ட பரீட்சிக்கப்பட்டதாகவும்

## கடற் பல்கலைக்..

வருகை தந்திருந்த சீன சனாதிபதியிடம் இலங்கையின் சனாதிபதி கடற்கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாகப் பேசியிருந்ததை அடுத்தே இந்த வாய்ப்பை இலங்கையிள் கடற்கல்விப் பல்கலைக்கழகம் பெற்றுள்ளதாக அவர் மேலும் விளம்பினார்.

அதற்கமைய இலங்கையின் கடற்கல்விப் பல்கலைக்கழகமும், தென் சீன கடற்கல்வியகத்தின் கடற்கல்விப்பல்கலைக்கழகமும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இவ்வுடன்படிக்கையின் படி இலங்கையின் கடற்கல்விக்குப் பயிற்சிகளையும் உதவிகளையும் சீனா வழங்கவுள்ளது. அதன் முதற் கட்டமாக இப்பல்கலைக்கழகத்தில் கல்வியியலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்களை வழங்கி சீன கல்வியகத்தில் அவர்கள் மேலதிகக் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க சீனா உதவிகளை வழங்கி வருவதுடன் சீனக் கல்விமான்கள் இலங்கையிலுள்ள கடற்கல்விப் பல்கலைக்கழகப் பயிற்சிப் பிரிவுகளுக்கு வருகைதந்து கற்றுக்கொடுக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலையுட்பட இலங்கையின் களுத்துறை, தங்காலை, யாழ்ப்பாணம், காலி, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் கடற்கல்விப் பல்கலைக்கழகப் பிரிவுகள் இயங்குகின்றன.

## பாதீட்டில் பல...

சனாதிபதி நாடாளுமன்றத்தில் வாசித்த போது பாதீட்டின் மொத்தச் செலவாக வெளிப்படுத்திய தொகை 1.812 ரில்லியன் ரூபாய்களாக இருந்தது. இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களின் ஊடாக செலவு மேலும் 356 பில்லியன் ரூபாய்களால் உயர்ந்துள்ளது.

இதற்கமைய அரசின் பொதுப்படுகடன் 440 பில்லியன்களாக உயர்ந்துள்ளது.

பாதீடு வாசிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் இவ்வளவு பெரும் தொகைகென ஒரு மேலதிக மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டமையானது இலங்கையின் பாதீட்டு வரலாற்றின் அண்மைக்காலங்களில் நடைபெறாத ஒன்று என தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புலமைப் பரிசில்....

இந்நிகழ்வில் அனைத்து தமிழ் பாடசாலைகளின் அதிபர்களையும் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு மூதூர் வலயச் செயலாளர் சோ.கங்கேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். இந்நிகழ்வானது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பா.தேவராஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெறுகின்றது. 2013ஆம் ஆண்டைவிட 2014ஆம் ஆண்டு தமிழ் பாடசாலைகளில் சித்தி வீதம் 15 வீதத்தால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முன்பள்ளியை மீட்க...

நாகேஸ்வரன், ஜனார்த்தனன், தமிழரசுக்கட்சியின் மூதூர்க் தொகுதிக் கிளைத் தலைவர் திருச்செல்வம், வெருகல் பிரதேச சபை உறுப்பினர் திரு ஜெகன், வெருகல் தொகுதித் தலைவர் திரு சுந்தரலிங்கம் முன்பள்ளியின் வரலாற்றினையும் அது இயங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர். 3 அல்லது 4 நாட்களுக்குள் முன்பள்ளியினை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளைத் தான் எடுப்பதாகவும் முன்பள்ளி நடத்துவதில் எதுவித பிரச்சினைகளும் இல்லை என திரு விராஜ் பாலசூரிய தெரிவித்தார் என திருச்செல்வத்தின் பேஸ்புக் தகவல் வெளியிட்டுள்ளது.

## கிழக்கு மாகாண...

சிங்கள மற்றும் முஸ்லிம் கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணக் கலைபண்பாட்டுத் திணைக்களப்பணிப்பாளர் விக்ரம ஆராய்ச்சியின் தலைமையில் நிகழ்ந்த இவ்விழாவில் அவர் இரு மொழிகளிலும் தனது பேச்சை நிகழ்த்தியிருந்தார். அதே வேளை இவ்விழாவின் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமலவீர திசாநாயக்க கலந்திருந்தார்.

இறைவணக்க நிகழ்வுகளில் கிறிஸ்தவர்களுக்குரிய இடம் ஒதுக்கப்படாமை பற்றி அங்கு வருகை தந்திருந்த கிறிஸ்தவர்கள் சற்று மனம் வெதும்பியதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

## நச்சுத் தன்மை...

தெரிவிக்கின்றது.

அடைக்கப்பட்ட அறைக்குள் நச்சுத்தன்மையை உருவாக்கக்கூடிய பல நச்சுப் பொருட்களை நுளம்புச் சுருளின் புகை கொண்டிருப்பதால் குறுங்கால மற்றும் நீண்டகாலப் பாதிப்புக்களை மனிதனில் உருவாக்கி விடுகின்றன என இப்பிரிவின் தலைவர் மருத்துவர் வருண குணதிலக்க தெரிவித்துள்ளார்.

குறுங்காலத்தில் தும்மல், இருமல், இழுப்பு மற்றும் தலையிடியை உருவாக்கும் இப்புகை நீண்டகாலத்தில் ஆஸ்த்துமா, மூச்சுத்திணறல், சுவாசப்பைச் செயலிழப்பு போன்ற கடுமையான வியாதிகளை உருவாக்க வல்லது என்று அவர் சமூகத்தை எச்சரித்துள்ளார்.

எதிர்ப்புச் சக்தி குறைவாகவுள்ள வளரும் குழந்தைகள் மற்றும் முதியோர் கடுமையான பாதிப்புக்களை இந்நஞ்சு கலந்த புகையினால் எதிர்கொள்வர் எனவும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

## பொதுக் குரலை...

முன்வைக்கப்பட்ட ஒற்றுமைக் குரலை உருவாக்கும் முயற்சியா என்ற சந்தேகம் வலுத்துள்ளது.

இந்திய உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த 8ம் திகதி நடைபெற்ற இந்தச் சந்திப்பு மூன்று மணித்தியாலங்கள் வரையில் நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்றாவது முறையாகவும் சனாதிபதி தேர்தலில் தற்போதைய சனாதிபதி போட்டியிடுவது ஏறக்குறைய முடிவாகியுள்ள நிலையில் பொதுக் குரலை உருவாக்கிப் பொது வேட்பாளரை முன்நிறுத்தும் முயற்சிகளுக்கு இந்தியப் பின்புலச் செயற்பாடுகள் தொடங்கியுள்ளதாகச் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இந்த சந்திப்பை சம்பந்தன் உறுதிப்படுத்தியுள்ளார். எனினும் இது வழமையான சந்திப்பு மட்டுமே என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனைப்பற்றி ஊடகங்களுக்கு தெரியப்படுத்த முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அனுமதியில்லாமல்...

ஆசிரியர்கள் எண்மர் முறைப்பா டொன்றைச் செய்துள்ளனர்.

இதனடிப்படையில் விசாரணைகளை நடத்துமாறு திருகோணமலை வலயக் கல்விப் பணிமனைக்கு கல்விச் செயலாளரிடமிருந்து அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரிய சங்கத்தின் செயலாளரைத் தொடர்பு கொண்ட போது குறித்த ஆசிரியர்களின் சம்மதக் கடிதத்தை தான் வலயக்கல்விப் பணிமனையில் ஒப்படைத்திருப்பதாகத் தெரிவித்தார்.

அதனை உறுதிப்படுத்த வலயக் கல்விப் பணிமனையைத் தொடர்பு கொண்டபோது முறைப்பாடு செய்த ஆசிரியர்களில் இருவருக்கு 2010லும், ஏனைய இருவருக்கு 2011லும் குறித்த சங்கத்திற்கு பணம் கழிக்கப்பட்டிருப்பதால் அந் நடைமுறை தொடர்வதாகவும் ஏனைய மூவருடைய சம்மதக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், எஞ்சிய ஒரு ஆசிரியரது சம்மதம் தொலைபேசியூடாகப் பெறப்பட்டதாக குறித்த சங்கத்தின் பொருளாளர் எழுத்து மூலம் தமக்கு அறிந்தந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்கள் குறித்த வருடத்தில் சங்கங்களில் இருந்து விலகியிருப்பின் அதனை உடடியாக வலயக் கல்விப் பணிமனைக்கு அறித்தர வேண்டும் என்று வலயக் கல்வி அலுவலகத்தின் பேசவல்ல அதிகாரியொருவர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நம்பிக்கை

## நபித்தோழர்கள் நம்பிக்கை கொண்டது போல் நம்பிக்கை கொள்வதே சிறந்த முறையாகும்

கடந்தவாரத் தொடர்ச்சி ....



இந்த வசனத்தில் இறைத்தூதர்களில் சிலரை சில விடயங்களில் அல்லாஹ் சிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

மூஸா நபியுடன் அல்லாஹ் நேரடியாகப் பேசியுள்ளான் ஈஸா நபி தந்தை இல்லாமல் பிறந்துள்ளார் இது அவர்களுக்கு வழங்கப்பட்ட விஷேட சிறப்பம்சமாகும்.

சுலைமான் நபிக்கு யாருக்கும் வழங்காத ஆட்சி அதிகாரம் வழங்கப்பட்டது. நபி(ச) அவர்கள் ஏனைய நபிமார்கள் போன்றல்லாது அகிலத்தார் அனைவருக்கும் தூதராக அனுப்பப்பட்டார்கள். இவ்வாறு சில நபிமார்கள் சில விடயங்களில் அடுத்தவர்களை விடச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். இந்த சிறப்புக்கள் விடயத்தில் அனைவரும் சமமானவர்கள் அல்லர்.

இருப்பினும், ஒரு நபியை விட இன்னொரு நபி என்று இறைத்தூதர்களிடையே பாகுபாடு காட்டுவது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை. யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் அன்று தொட்டே பகை நீடித்து வருகின்றது. இருப்பினும் யூதர்களுக்கு அனுப்பப்பட்ட மூஸா நபியை விட, எமக்கு அனுப்பப்பட்ட முஹம்மது நபி சிறந்தவர் என்று கூறுவதை இஸ்லாம் தடுக்கின்றது. இந்நிலைப்பாடு இஸ்லாம் கொண்டிருக்கின்ற மத சகிப்புத் தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. உலகில் உள்ள எந்தக் கொள்கையிலோ, மதத்திலோ இவ்வாறான தோர் நடுநிலைப்போக்கை (யேவரசயட நயஎ)க் காண முடியாது என்றால் பிழையாகாது.

அபூ ஹுரைரா(வ) அறிவிக்கிறார்கள். "ஒரு முஸ்லிமும் ஒரு யூதரும் ஒருவரையொருவர் திட்டிக் கொண்டனர். அந்த முஸ்லிம், உலகத்தார் அனைவரை விடவும் முஹம்மத்(ச) அவர்களுக்கு மேன்மையை அளித்தவன் மீது சத்தியமாக! என்று கூறினார். அந்த யூதர், உலகத்தார் அனைவரை விடவும் மூஸாவுக்கு மேன்மையை அளித்தவன் மீது சத்தியமாக! என்று கூறினார். அதைக் கேட்டுக் (கோபம் கொண்டு) அந்த முஸ்லிம் தன் கையை ஓங்கி யூதரின் முகத்தில் அறைந்துவிட்டார்

தொடரும் ....




# வாரமொரு ஜோக்

- அருணன் -

பல நாட்களாக தனது கண்கள் சரிவர தெரியவில்லை என்ற தனது தாத்தாவின் நச்சரிப்பு தாள முடியாத பேரன் தனக்கு பரிச்சியமான கண்வைத்தியரின் முகவரியை கொடுத்து அவ்வைத்தியரிடம் சென்று கண்களை பரிசோதிக்குமாறும் தனக்கு அவசர வேலையுள்ளதாகவும் கூறி தனது அலுவலகம் சென்றுவிட்டான்.

இரவு சற்று தாமதமாகவே வேலை முடிந்து வீடு வந்த பேரனை தூங்காமல் விழித்திருந்த தாத்தா கோபமாக, நீ ஓர் ஒழுங்கான வைத்தியரை காண்பிக்ககூடாதா..? என்றார்.

பேரனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் தாத்தா? என்றான் குழப்பமாக.

நான் அங்கு சென்றதும் அவரின் க்ளினிக் வாயிலில் தொங்க விடப்பட்டிருந்த அறிப்பு பலகையை கவனமாக வாசித்தேன். அதில் "கண் வைத்தியர்" பார்வை நேரம்.. பி.ப. 4.30 தொடக்கம் மாலை 8மணிவரை... என்றிருந்தது. அந்த வைத்தியருக்கே மாலை 4.30 இலிருந்து 8மணிவரைதான் பார்வை தெரியுமாம், இவன் எப்படி எனது கண்ணை பரிசோதிப்பான் என்று திரும்பிவிட்டேன் என்றார். பேரன் தலையில் கை வைத்தான் வேறு வழிதெரியாது.

**ஹா! ஹா! ஹா!**

காதலன்: அன்பே நாம் மோதிரம் மாற்றிக் கொள்வோமா?

காதலி: நான் போட்டிருப்பது தங்கம். நீங்க போட்டிருப்பது பித்தளை. நீங்களும் தங்க மோதிரம் போட்டுட்டு வாங்க, மாத்திக்குவோம்.

**ஹா! ஹா! ஹா!**

டாக்டர் : உங்க மாமியாரைக் காப்பாத்துறது கஷ்டம்.

மருமகள் : நீங்க நல்ல டாக்டர்னு எல்லோரும் சொன்னது இப்ப தான் புரியுது.

டாக்டர் : ? ? ? ? ?

**ஹா! ஹா! ஹா!**

"எந்த ஐட்டம் கேட்டாலும் இல்லைன்னு சொல்றே, அப்புறம் என்ன எழவுக்கு மெனுகார்டை கொடுத்தே?"

"ஒவ்வொரு ஐட்டத்தோட பேரையும் சொல்லி, இல்லைன்னு சொன்னா எனக்கு வாய் வலிக்குமே சார்."






## சிகப்பழகில் மிளிர தலைமுடி கவனிப்பு

பெண்களில் பெரும்பாலான கருமை நிறம் கொண்டவர்கள், தாங்கள் சிகப்பழகுடன் திகழ வேண்டும் என்பதை விரும்புவதுண்டு. சில ஈஸியான டிப்ஸ்களை பின்பற்றினாலே சில தினங்களில் சிகப்பழகை பெற முடியும். அவற்றை இப்போது நாம் பார்ப்போம்.

**ஸ்பெஷல் சீயக்காய்**

சிகப்பழகை பெற முகத்தில் அழகு இருப்பது மட்டும் அவசியம் என்பது இல்லை. சருமத்தில் ஓரளவு எண்ணெய் பசை இருப்பது போல பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இப்படி சிகப்பழகுடன் கூடிய சர்மத்தை பெற சீயக்காய் ஒன்றை செய்து தேய்த்து கொண்டால், என்றும் அழகு நமது முகத்தில் ஜொலிக்கும்

**தேவையான பொருட்கள்**

சீயக்காய்-கால் கிலோ, பயறு- கால் கிலோ, வெந்தயம்- கால் கிலோ, புங்கங்கொட்டை- 100 கிராம், பூலான் கிழங்கு - 100 கிராம்.

**செய்முறை**

இவை அனைத்தையும் நன்றாக மெஷினில் அரைத்து வைத்துக் கொண்டால், ஸ்பெஷல் சீயக்காய் பவுடர் ரெடி. வாரம் இருமுறை உச்சி முதல் உள்ளங்கால் வரை எண்ணெய் தேய்த்து, இந்த ஸ்பெ்ல் பொடியை தலையில் நன்கு போட்டு அலசுங்கள். இதனால் தலையும் சூப்பராக சுத்தமாகி விடும். மேலும் தோலின் எண்ணெய் பசை ஓரேயடியாக ஓடிப்போகாமல், கருமையும் மறையத் தொடங்கும்.




**சிகப்பழகை தரும் சிறந்த டிப்ஸ்**

தலையை கவனிப்பது முதல் வழி. தலையில் அழுக்கும் பிசுக்கும்சேர்ந்து இருந்தால் முகம் கருப்பாகி விடும். தலை சுத்தமாக இருந்தால்தான் சருமத்தின் கருமை படராது.


**அடுத்ததாக கவனிக்க வேண்டியது. சருமம்!**

வெளியில் போவதற்கு முன் சிறிது தயிரை முகம், கைகளில் தேய்த்து கொள்ளுங்கள். பிறகு மிதமான சுடுநீரில் அலம்பி துடைத்து விட்டு, டால்கம் பவுடரை போட்டுக் கொள்ளுங்கள். இதனால் வெயிலின் உக்கிரம் சருமத்தை பாதிக்காது.

## நகப்பராமரிப்பு



முகத்தை அலங்கரிப்பது போல் நகத்தை அலங்கரிப்பதிலும் பெண்கள் ஆர்வம் காட்டத் தொடங்கி இருக்கிறார்கள். நகத்தின் வளர்ச்சிக்கு கரோட்டின் என்ற புரதச்சத்து தான் காரணம். எனவே உங்கள் உணவில் புரதம் இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள். நகத்தை பற்களால் கடிக்க கூடாது.





மற்றும் துணி துவைக்க தரமான சோப்புகளை பயன்படுத்துங்கள். வீட்டு வேலை முடிந்ததும் கைகளை கழுவுங்கள். சிறிது நேரம் கழித்து கிரீம் தடவுங்கள். இதனால் நகங்களை உடையாமல் பாதுகாத்து கொள்ளலாம். நகத்துக்கு சாயம் பூசும் முன் முதல் கட்டமாக பேஸ் கோட் தடவவும். இதனால் நகச் சாயத்தின் நிறம் நகங்களில் படியாமல் இருக்கும்.




## ஹார்மோன்களும் மாற்றங்களும்

பெண்களுக்கு ஹாமோன் மாற்றங்கள் ஒவ்வொரு காலகட்டங்களில் நடக்கின்றன. ஒரு பெண்ணுக்கு முதல் மாதவிலக்குக்குச் சற்று முன் ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ரான் என்ற ஹார்மோன்கள் சுரக்கின்றன. இவை இரண்டும் பெண்ணுக்கே உரிய இரு முக்கிய ஹார்மோன்கள் ஆகும். இந்த இரு ஹார்மோன்களால் தான் பருவம் அடைகிறாள்.

பருவம் அடைந்த பிறகு மாதவிலக்கு நிற்கும் வரை பெண்ணை ஒவ்வொரு மாதமும் கருத்தரிப்பதற்கான வாய்ப்புக்கு ஹார்மோன்கள் தயார்படுத்துகின்றன. இந்த ஹார்மோன்களின் உத்தரவுப் படிதான் ஒவ்வொரு மாதமும் சினைப்பைகள் ஒரு முட்டையை வெளியிடுகின்றன. ஒரு பெண் கருத்தரிக்க இந்த ஹார்மோன்கள் முக்கிய காரணமாக இருக்கின்றன.

கருத்தறித்த பிறகும் தாய்ப்பால் கொடுக்கும் போதும் ஹார்மோன்கள் பல மாற்றங்களை உண்டாக்குகின்றன. இந்த ஹார்மோன்களால் தான் ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும்போது மாதவிலக்கு ஏற்படுவதில்லை. குழந்தை பிறந்த உடனே பாலைச் சுரக்க வைப்பதும் இந்த ஹார்மோன்கள் தான்.

ஒரு பெண் இனப்பெருக்கத்துக்கான கட்டத்தை கடக்கும் போது இந்த இரு ஹார்மோன்களும் சுரப்பது படிப்படியாகக் குறையும். சினைப்பைகளும் முட்டையை வெளியிடாது. பெண்ணின் உடலில் கருத்தறிப்பதற்கான வாய்ப்பும் முடிந்து போகும். மாதவிலக்கு முற்றிலுமாக நின்று போகும். இதற்கு பெயர்தான் மாதவிலக்கு நின்று போதல் அல்லது மெனோபாஸ்.

இவற்றைத் தொடர்ந்து பெண்ணின் உடலில் சுரக்கும் ஹார்மோன்களின் தன்மை மற்றும் அளவுக்கேற்ப அவளின் எடை, உடல்சூடு, பசி மற்றும் எலும்பின் சக்தி ஆகியவற்றிலும் மாற்றங்கள் ஏற்படும்.

## காலை உணவுடன் டீ யா?



பலருக்கும் டிபன் சாப்பிட்டவுடன் காபி அல்லது டீ குடிக்கும் பழக்கம் இருக்கும். பொதுவாக அனைவரும் காலை எழுந்தவுடன் டீ அல்லது காபி குடிப்பர். ஆனால் காலை உணவு சாப்பிட்ட பிறகு டீ அல்லது காபி குடிப்பது என்பது இயற்கை வகுத்துள்ள உணவுத் திட்டத்தின்படி தவறாகும்.

காலை எடுத்துக் கொள்ளும் உணவில் உப்பு இருக்கும். அந்த வேளையில் உடனே ஒரு கப் டீ அல்லது காபி குடிக்கிறோம். உப்புடன் கூடிய உணவுடன் பாலுடன் கூடிய டீ அல்லது காபி சேரும் போது, அது ஒரு விஷப்பொருளாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது. இது உடலில் ஆரோக்கியத்திற்கு மாறாக பல பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். அதனால் காலை உணவுடன் டீ அல்லது காபி குடிப்பதைவிட, மோர் குடிப்பது மிகவும் நல்லது, இது உணவு செரிமானத்திற்கு உதவும்.



## இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு நன்மை தரும். பணியாளர்கள், தம் கடமை உணர்ந்து செயல்பட வேண்டும்.

**ரிஷபம்** : பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக்கொள்வர்.

**மிதுனம்** : ஊட்டம் தரும் உணவு, சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும்.

**கடகம்** : பலவித நன்மை பெறுவீர்கள். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள்.

**சிம்மம்** : உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள்.

**கன்னி** : தொழில் நுட்ப அறிவை வளர்த்துக் கொள்வீர்கள்.

**துலாம்** : எதிர்ப்புகள் விலக, இட் தெய்வ அருள்பலம் துணை நிற்கும்.

**விருச்சிகம்** : வியாபாரத்தில் வரும் இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும்.

**தனுசு** : உங்களின் அந்தஸ்து கண்டு எதிரி வியப்புறுவர். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினரின் உதவி கிடைக்கும்.

**மகரம்** : இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவது, ஒற்றுமை வளர உதவும்.

**கும்பம்** : பணியாளர்கள், இலக்கு நிறைவேற்ற கால அவகாசம் எடுத்துக் கொள்வர்.

**மீனம்** : அரசு சார்ந்த உதவி பெறுவதில் தாமதம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## அகில இலங்கை



## ஆசிரியர் போட்டி

09.11.2014 நுவரெலியாவில் நடைபெற்ற அகில இலங்கை ஆசிரியர் விளையாட்டுப் போட்டியில் திருகோணமலை கல்வி வலயத்தில் இருந்து பங்கு கொண்டு தங்கப்பதகக்கங்கள் பெற்றுக் கொண்ட ஆசிரியர்கள்.

**திரு சிவநேசன்**
**– ஸ்ரீ சண்முகா இந்து மகளீர் கல்லூரி.**
**திரு. சிவதீபன்**
**– புனித சூசையப்பர் கல்லூரி**




வியக்க வைத்து விஸ்வரூபம் எடுத்த ரோஹித் சர்மாவின் இரட்டை சதம்.இந்திய இலங்கை அணிகளுக்கு இடையிலான 4 வது ஒருநாள் போட்டி கொல்கொத்தா Eden garden மைத்தா னத்தில் நிறைவுக்கு வந்திருக்கிறது.

இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் போட்டி தொடரின் போது தேர்வாளர்கள் ரோஹித் சர்மாவை அணியில் உள்வாங்காமல் அஜின்கியா ரஹானியையே ஆரம்ப வீரராக பயன்படுத்த தீர்மானித்தனர். இந்த நிலையில் தன்னை அடையாளப்படுத்த வேண்டிய தேவையும், ஆரம்ப வீரரராக அசத்த வேண்டிய தேவையும் இவருக்கு மறைமுகமாக இருந்தமையை யாரும் மறுக்க முடியாது. இப்படியான நிலையில் தான் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உலக சாதனையை ரோகித் இன்று படைத்திருக்கிறார்.

## சங்ககார அதிருப்தி



இந்தியாவுக்கு எதிரான முதல் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடிய இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான சங்கக்கார கடைசி இரு ஒருநாள் போட்டிகளுக்கு ஓய்வு என்ற பெயரில் தாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார். இதனால் அதிருப்தியடைந்துள்ளார் சங்கக்கார.

## மரின் சிலிச்சை எளிதாக தோற்கடித்த ஜோகோவிச்



லண்டனில் இடம்பெற்றுவரும் ஏ.டி.பி. உலக டூர் டென்னிஸ் போட்டியில் “ஏ” பிரிவில் இடம்பெற்ற லீக் போட்டியில் நடப்பு சம்பியன் ஜோகோவிச் 6-1, 6-1 என்ற நேர் செட்டில் அமெரிக்க ஓபன் சம்பியனான மரின் சிலிச்சை தோற்கடித்தார்.

## உலகக்கிண்ணத்தில் சுபர் ஓவர் நீக்கம்

ICC CRICKET WORLD CUP 2015

2015 ஆம்ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் நொக் அவுட் சுற்றில் சுப்பர் ஓவர் நீக்கப்பட்டுள்ளதுடன் பரிசுத் தொகையாக ரூபா 60 கோடி வழங்கப்படவுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 29ஆம் திகதி வரை அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் இடம்பெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## களத்தடுப்பு பயிற்சியாளராக பென்னி

இலங்கை கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக ட்ரவர் பென்னி நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய அணியின் களத்தடுப்பு பயிற்றுவிப்பாளராக இருந்து நீக்கப்பட்ட ட்ரவர் பென்னி, இந்திய கிரிக்கெட் சபையின் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் கடமையாற்ற மறுத்திருந்தார். இதனையடுத்து இந்தப் பதவிக்கு இலங்கை கிரிக்கெட் அவரை நியமித்துள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

- **எபோலா தொற்றினால் இறப்போர் எண்ணிக்கை அதிகரித்தே செல்கிறது.**

ஆபிரிக்காவின் மேற்கு பகுதியில் உள்ள கினியா, லைபீரியா, சியாராலோன், மாலி ஆகிய நாடுகளில் எபோலா நோய் பரவியுள்ள நிலையில் இதுவரை எபோலோவினால் பாதிக்கப்பட்டு 5 ஆயிரத்து 160 பேர் உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

- **ஒரு வயது யானையின் உயிர் போராட்ட வெற்றி**

தென்னாப்ரிக்காவின் வனப்பகுதியில் சம்பியா என்ற இடத்தில் ஒரு வயதே ஆன குட்டி யானை, தன்னை கோரப் பசியுடன் தாக்கிக் கொல்ல முயன்ற 14 சிங்கங்களின் பிடியில் இருந்து போராடி தப்பியிருக்கிறது. வனப்பகுதிக்கு சுற்றுலா சென்ற பயணிகளால் இந்த காட்சி படம்பிடிக்க ப்பட்டுள்ளது.

- **சிறுவர் பள்ளிக்கூடத்தில் தாக்குதல்**

மாகாணமான ஹமாவில் இடம்பெற்ற இரு ஏவுகணைத் தாக்குதல்களில் 7 சிறுவர்கள் பலியாகியுள்ளனர். கர்னாஸ் நகரிலுள்ள ஆரம்பப் பாடசாலையின் மீது மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் பாடசாலைக் கட்டிடம் கடும் சேதமடைந்துள்ளது.

- **மேலும் வீரர்களை அனுப்பிய அமெரிக்கா**

ஈராக்கில் முஸ்லீம் போராளிகளுடன் போரில் ஈடுபடும் அமெரிக்க கூட்டுபடைகளுக்கு உதவுவதற்காக மேலும் 1,500 இராணுவ வீரர்களை அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

- **மேலும் வீரர்களை அனுப்பிய அமெரிக்கா**



ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக் மற்றும் சிரியாவில் பெரும்பாலான பகுதிகளை கைப்பற்றியுள்ளனர். அவற்றை ஒருங்கிணைத்து ”இஸ்லாமிய தேசம்” என்ற புதிய நாட்டை உருவாக்கியுள்ளனர்.

அங்கு இஸ்லாமிய சட்டத்தை அமுல்படுத்தி வருகின்றனர். தற்போது அவர்கள் தங்களுக்கென்று தனியாக செலாவணியை அதாவது ரூபாவை உருவாக்கியுள்ளனர். இஸ்லாமிய தேசத்தில் தங்கம் வெள்ளி நாணயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- **43 கல்லூரி மாணவர்கள் படு கொலை**

மெக்சிகோவில் போதை மருந்து கும்பலும், ஆயுத கும்பல்களும் பயங்கர குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் லுகுலா என்ற இடத்தில் 3 வாரத்துக்கு முன்பு கல்லூரி மாணவர்கள் 43 பேரை ஆயுத கும்பல் ஒன்று கடத்தி சென்றது. இப்போது 43 மாணவர்களையும் அவர்கள் கொலை செய்துள்ளது தெரியவந்துள்ளது.

- **140 காதலர்கள் – ஒரு பெண்**



வியட்நாம் நாட்டைச் சேர்ந்த ஒருவர் ஐபோன் 6 ஒன்றின் விலை 950 டொலர்கள் என காட்சிப்படுத்தப் பட்டிருந்ததையடுத்து ஐபோன் 6 ஒன்றினை தன் காதலிக்காக வாங்கினார். ஆனால் அவருடைய ஐபோனுக்கு மேலதிக உத்தரவாக கட்டணத்தை சேர்த்து 1500 டொலர்கள் என அவருக்கு பற்றுச்சீட்டு கொடுக்கப்பட்டுள்ளது. அவர் குறித்த பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையை கவனிக்காமல் தன்னுடைய டெபிட் கார்டை கொடுத்து பணத்தை கட்டிவிட்டார்.

பின்னர் தொகையை பார்த்து அதிர்ச்சி அடைந்த குறித்த நபர், தான் மாதம் 200 டொலர்கள் மாத்திரமே சம்பாதிப்பதாகவும், எனவே தன்னுடைய பணத்தை திருப்பி கொடுத்துவிடும்படியும் கெஞ்சினார். ஆனால் கடைக்காரர் கொடுக்க மறுத்ததால் அவர் அந்த இடத்திலேயே முழங்கால் இட்டு மண்டியிட்டு அழுது புலம்பியுள்ளார்.

- **10 ஆண்டு தகுதியிழப்பு**



மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி மக்களின் முதல்வர் என்று அ.தி.மு.க.வினரால் அழைக்கப்படும் ஜெயலலிதா 10 ஆண்டுகள் தேர்தலில் நிற்க தகுதி இழப்பு செய்யப்பட்டுள்ளதாக சட்டப் பேரவைத் தலைவர் தனபால் பிறப்பித்த உத்தரவு அரசாணையாக அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

- **மாலுமிக்கு சிறைத்தண்டனை**

கடந்த ஏப்ரல் மாதம் தென்கொரியாவில் மூழ்கிய கப்பலின் மாலுமி அலட்சியம் செய்தார் எனக் குற்றவாளியாகக் கண்டுகொள்ளப்பட்டு, அவருக்கு 36 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

- **முதல் முறையாக வால் நட்சத்திரத்தை சென்றடைந்த விண்கலம்**

வால் நட்டசத்திரங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆய்வு செய்ய ஐரோப்பிய யூனியன் கடந்த 2004ம் ஆண்டு மார்ச் மாதம் 2ம் தேதி ரோசெட்டா விண்கலத்தை விண்ணில் ஏவியது. அதில் ஃபிலே என்ற 100 கிலோ எடையுள்ள லேண்டர் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விண்கலம் ரூ.9 ஆயிரத்து 600 கோடி செலவில் உருவாக்கப்பட்டது. 67பி என்ற வால் நட்சத்திரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட ரோசெட்டா 10 ஆண்டுகளாக 6.4 பில்லியன் மைல் தொலைவு பயணம் செய்து கடந்த ஆகஸ்ட் மாதம் வால் நட்சத்திரத்தை அடைந்தது.

- **சுதந்திர வர்த்தக திட்டத்திற்கு அபெக் நாடுகள் ஆதரவு**

APEC
Asia-Pacific Economic Cooperation

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தகத்தை முன்னெடுப்பதற்காக சீனாவால் முன்வைக்கப்பட்ட திட்டத்திற்கு பிராந்திய தலைவர்கள் செவ்வாய்க்கிழமை ஆதரவளித்துள்ளனர். ஆசிய – பசுபிக் பொருளாதார கூட்டுறவு அமைப்பில் 21 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

- **குடியரசுக் கட்சி வெற்றி – ஒபாமா திண்டாட்டத்தில்**



அமெரிக்க செனட் சபைக்கான நடுத்தவணை தேர்தலில் குடியரசுக்கட்சி, செனட் சபையில் பெரும்பான்மை பெறும் வகையில் நேற்று செவ்வாய்க்கிழமை வெற்றி பெற்றுள்ளது.
இதனால், ஜனாதிபதி பராக் ஒபாமாவின் அதிகாரம் குறைந்துள்ளது. இந்த நிலையில், அவர் பதவியிலிருக்கும் இரண்டு வருடங்களில் பல சிக்கல்களை உருவாக்கும் எனவும் வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

- **140 காதலர்கள் – ஒரு பெண்**

இங்கிலாந்தைச் சேர்ந்த பெண் சாண்டி நார்டோ(53). இவர் தனது 20 வயதுகளின் போது அழகு மிகு நடன மங்கையாக திகழ்ந்தார். அவர் உலகம் முழுவதும் சென்று நடன நிகழ்ச்சிகளை நடத்தியபோது பல ஆண்களுடன் தொடர்பு ஏற்பட்டது. தனது வாழ்நாளில் இதுவரை 140 ஆண்களை காதலித்து இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளியை மீட்க மக்கள் போராட்டம்






வெருகல் பிரதேசத்தின் கல்லடிக் கிராமத்தின் முன்பள்ளியை பிக்குவிடம் இருந்து மீட்டுக் கொள்வதற்காக மக்கள் போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

பல்லாண்டுகளாக இயங்கிவந்த மேற்படி பாடசாலை 2008ம் ஆண்டில் மீள்குடியேற்றத்தின் பின்னர் சேவ் த சில்ரண் அமைப்பால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வழங்கப்படுடிருந்தது.

அப்பாடசாலைக்குத் திடீரெனச் செல்ல முடியாதவாறு அப்பிரதேசத்தின் பிக்குவால் தடை செய்யப்பட்டதுடன் புனித பூமியின் பெயரால் அப்பாடசாலை உள்ளிட்ட நிலப்பகுதி ஆக்கிரமிக்கப்பட்டதை அடுத்து மக்கள் போராட்டம் வெடித்துள்ளது.

அதனையடுத்து 13.11.2014 ஆம் நாள் இவ் விடயமாக இறுதி முடிவெடுப்பதற்காக தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர்(கிழக்கு மாகாணம்) திரு விராஜ் பாலசூரியா அங்கு வந்திருந்தார். அவரிடம் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தண்டாயுதபாணி, மாகாணசபை உறுப்பினர்கள் 13

## இராணுவ சாகச நிகழ்வுகள் பின்போடப்பட்டுள்ளன

எதிர்வரும் 23 மற்றும் 24ம் திகதிகளில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த இராணுவ சாகச நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணங்களால் டிசம்பர் 04 மற்றும் 05ம் திகதிகளுக்குப் பின்போடப்பட்டுள்ளதாக கேணல் சரத் அமரசிங்க மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாண "எழுவானில் கலை இலக்கிய விழா- 2014" தமிழ் சிங்கள மொழிகளில் நடந்தேறியது

கிழக்கு மாகாண கலை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் கலை இலக்கிய விழா இவ்வருடம் அம்பாறையில் நடாத்தப்பட்டுள்ளது. இவ்விழாவில் தமிழ் 13


கேணிப்பித்தன்


மருத்துவர் சதீஸ்


ஜெயாகரன்

## புலமைப்பரிசில் பரீட்சை 2014 - அதிபர்கள் ஆசிரியர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பாராட்டு விழா


மூதூர் கல்வி வலயத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிறப்பான பெறுபேறுகள் பெறுவதற்கு தம்மை அர்ப்பணித்துக் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மூதூர் கிளை நடாத்தும் பாராட்டுவிழா 15.11.2014 (சனிக்கிழமை) கிளிவெட்டி மகாவித்தியாலயத்தில் மூதூர் கிளைத் தலைவர் இரா.இரத்தினசிங்கம் தலைமையில் காலை-9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. 13

## அனுமதியில்லாமல் ஆசிரியர் சங்கத்திற்கு அங்கத்துவப் பணம் கழிப்பு - ஆசிரியர்கள் முறைப்பாடு

ஆசிரியர்களின் ஒப்புதலின்றி அவர்களின் சம்பளப் பணத்தில் ஆசிரியர் சங்கமொன்றிற்கு அங்கத்துவப் பணம் கழிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் என்ற ஆசிரியர் சங்கத்திற்கு அங்கத்துவப் பணமாக ரூபா. 240 கழிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் 13

## "மரணம் தடுக்கப்பட முடியாதது" அமரர் ரவிராஜ்



மரணம் தடுக்கப்பட முடியாதது எனத் தம்மிடம் அமரர் ரவிராஜ் அவர்கள் தெரிவித்ததாக சிரேட்ட சட்டத்தரணி கேவி தவராசா அவர்கள் தெரிவித்துள்ளார்.

அமரர் ரவிராஜ் அவர்களின் 8வது சிரார்த்தினத்தில் தனது உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

தமிழ் தேசிய பணிக் குழுவினால் மறைந்த மாமனிதன் ரவிராஜ் அவர்களின் நினைவுச் சொற்பொழிவு நிகழ்வில் சிரேஸ்ட சட்டத்தரணி கே.வி. தவராசா நினைவுரை ஆற்றினார்.

அவர் தனது உரையில்,

ரவிராஜ் கொலை செய்யப்பட்ட தினத்திற்கு ஒரு கிழமையின் முன்னர் நான் அவரிடம் பாதுகாப்பில் அவதானம் தேவையென்று அறிவுரை வழங்கினேன். அப்போது, "அண்ண மரணம் தடுக்கப்படமுடியாது" என ரவிராஜ் என்னிடம் கூறிய வார்த்தைகள் காலத்தால் என் மனதிலிருந்து அழிக்க முடியாததாக பதிவாகிவிட்டது என்று தெரிவித்தார்.

## சண்டித்தனம் காட்டிய சுமண தேரருக்கு உயிரச்சுறுத்தலாம்!!!!

தனக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதாக மட்டக்களப்பு மங்களாராமய விஹாரையின் விஹாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர், கொழும்பிலுள்ள காவல்துறைத் தலைமையகத்தில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார். தனக்கு வழங்கப்பட்டிருந்த காவல்துறைப் பாதுகாப்பும் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்துடன் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதற்கான பொறுப்பை காவல்துறை ஏற்கவேண்டும் என்றும் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஹாரையில் மின்சாரத்தை துண்டிப்பதற்காக வருகை தந்த இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளுடன் தூசண வார்த்தைகளைப் பாவித்து உரையாடியதும் அவர்களைத் தாக்க எத்தனித்ததும் காணொளிகளில் வெளியாகியது. அவ்வேளை அவ்விடத்தில் இருந்த இருநட்சத்திர காவல்துறை அதிகாரி மிகப் பொறுமை காத்ததும் சட்ட நடவடிக்கையை எடுக்கத் தயங்கியதும் அக்காணொளியில் தெளிவாக பிடிக்கப் பட்டிருந்தது.



மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிறதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, உட்துறை வீதி, திருகோணமலையில் இருந்து 15.11.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது
உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

வார இறுதி நாட்களில் 1000 ரூபாவிற்கு மேல் வருமானமீட்ட இதோ வழி
விற்பனையாளர்கள் தேவை
மலைமுரசு பத்திரிகையினை விற்பனை செய்வதற்கு விருப்பம் உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.... உரிய விற்பனைப் பயிற்சி வழங்கப்படும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org